# சமூகக்கல்வியும் வரலாறும்

## ஆசிரியர் கைந்நூல்

## ( 6 - II )



சமூகக்கல்வி மன்றம்
வன்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சிறிலங்கா அரசின் பாடத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் இது வரை கற்பிக்கப்பட்டுவரும் வரலாற்றுப்பாடநூல்கள் உண்மை யான வரலாறாக அமையாமல் சிங்கள இனத்தை மேன்மைப் படுத்தக்கூடிய வகையில் மிகைப்படுத்தியும், தமிழர்கள் பெருமை களை மறைத்தும், தமிழ்மக்களை இழிவுபடுத்தும் வகையிலே திரித்தும் எழுதப்பட்டுள்ளன.

இந்தநாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரிய நாடென் றும் அவர்களது வரலாறே ஈழத்து வரலாறென்றும் சிங்களவரால் சிங்களவர்களுக்காகச் சிங்களமொழியில் எழுதப்பட்ட ஆக்கங் களின் தமிழ் மொழிபெயர்ப்பே தமிழ்மாணவர்களுக்கு ஈழத்து வரலாறென்று கற்பிக்கப்பட்டுவருகிறது.

சிறப்பும் மேன்மையும் மிக்க வரலாற்றைக்கொண்ட ஓர் இனம், அந்த வரலாற்றாற் பெருமையடைகிறது. அத்தகைய வரலாறு அந்த இனத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது. பெரு மைமிக்க பண்டைய வரலாற்றைக்கொண்ட ஈழத்தமிழினத்தின் இன்றைய மாணவர்கள் தமது வரலாற்றைக் கற்பதும் தெரிந்து கொள்வதும் அதனூடாக அவர்கள் வளர்ச்சியைப் பெறுவதும் சிங்கள ஆட்சியாளரால் திட்டமிட்டு மறுக்கப்படுகிறது. அது மட்டுமன்றி "உனது இனம் இந்த மண்ணை ஆக்கிரமிக்க வந்த இனம், இந்த மண்ணில் அக்கிரமம் புரிந்த இனம், கள்ளத் தோணியில் வந்த இனம், அடிமை இனம், எனத் தமிழினம் இழிவுபடுத்தப்படுகின்றது. பொய்யான வரலாறு தமிழ் மாணவர் களுக்குப் புகட்டப்படுகிறது.

இத்தகைய கல்வியினால் தமிழ்மாணவர்கள் தன்னம்பிக் கையோ நாட்டுப்பற்றோ அற்றவர்களாக வாழும் நிலை இருந் துவருகிறது. இனத்துக்கு வழிகாட்டும் வரலாற்றுக்கல்விக்கு இந் நிலை என்றால் சமூகவாழ்க்கையை நெறிப்படுத்தும் நோக்கோடு சிறிலங்கா அரசால் கற்பிக்கப்படும் சமூகக்கல்வியினூடாகத் தமிழ்மாணவர்கள் தமது நாட்டின் நீர்வள நிலவளங்களையோ, சமூக அறிவையோ வாழ்க்கையை நெறிப்படுத்தக்கூடிய அறி வையோ, பெறமுடியவில்லை. தமிழினத்தைச் சிங்களவர்களுக்கு அடங்கி அடிமையாக வாழவைப்பதற்கேற்ற வகையிலேயே சமூ கக்கல்விப்பாடத்திட்டம் பாடப்பரப்புகள் திட்டமிடப்பட்டு ஆக் கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் இன்றைய வரலாறு சமூகக்கல்விப் பாடங்களில் தமிழ்மாணவர்களுக்கு நாட்டமோ ஆர்வமோ ஏற்படவில்லை. தேர்வுகளிற் புள்ளிபெறுவதற்கென்ற ஒரே நோக்கிலேயே இப் பாடங்களைத் தமிழ்மாணவர்கள் படிக்கின்றனர்.

தமிழ்மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடியதாக வும் சமூகவாழ்வை நெறிப்படுத்தக்கூடியதாகவும், பொதுத் தேர்வுகளுக்கு ஊறுநேராதவகையிலும் 6, 7, 8ஆம் ஆண்டு மாணவர்களுக்கு ''சமூகக்கல்வியும் வரலாறும்'' என்ற பாட நூலினூடாகச் சில பாட அலகுகளைச் சமூகக்கல்வி மன்றம் ஆக்கித்தந்திருக்கிறது.

இந்நூல்களில் வரும் பாட அலகுகளைக் கற்பிப்பதற்கு ஆசி ரியர்களுக்கு உதவக்கூடிய குறிப்புக்களையும் பாடங்கள் ஆக்கப் பட்டதன் நோக்கங்களையும் கொண்டதாக இந்த ஆசிரியர் கைந்நூல் வெளியிடப்படுகிறது. இதைப் பயன்படுத்தி ஆசிரியர் கள் மாணவர்களைச் சிறந்தமுறையில் வழி நடத்தவேண்டும். என்ற வேணவாவோடு இக்கைந்நூலை வெளியிடுகின்றோம்.

**30-01-1999** **சமூகக்கல்வி மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக்கல்வியும் வரலாறும்

## ஆசிரியர் கைந்நூல்
## (ஆண்டு 6-8)

### பொது நோக்கங்கள்:

கட்டுக்கதைகளும், தொன்மப்புளுகுகளும், ஊகங்களும் வரலாறாகிவிட முடியாது. மரபுக்கதைகளும் இலக்கியக்கருத்துக்களும் ஊகங்களே; அந்த ஊகங்கள் தொல்லியற்சான்றுகளாலோ மானிடவியற்சான்றுகளாலோ, சமூகவியற்சான்றுகளாலோ மெய்ப்பிக்கப்படுமிடத்திற்றான் அது வரலாறாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே,

01) மகாவம்சம் போன்ற தொன்ம (புராண)ப் புளுகுகள் வரலாறல்ல என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தல் வேண்டும்.

02) இலங்கையின் முதற்குடிகள் ஆரியர் (விஜயன் கூட்டத்தினர்) அல்லர் என்பது விளக்கப்படல் வேண்டும்.

03) திட்டமிட்டு மறைக்கப்பட்ட தமிழர் வரலாறு தெளிவுபடுத்தப்படல்வேண்டும்; வெளிக்கொண்டுவரப்படல் வேண்டும்.

04 திட்டமிட்டுத் திரிக்கப்பட்ட வரலாறு திருத்தப்படல் வேண்டும்.

05) தமிழ் அரசுகள் தொடர்பான இலக்கியச்செய்திகள் தெளிவுபடுத்தப்படல்வேண்டும்.

06) இவற்றுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

07) வரலாற்றுச் சான்றுகள் தொல்லியற் பொருட்கள் பேணப்படல்வேண்டும்.

08) தமிழர்களாகிய நாம் இந்த நாட்டின் குடிமக்கள் என்பது தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.

09) நாம் இந்த நாட்டின் அனைத்து உரிமைகளுக்கும் உரித்துடையவர்கள் என்பது தெளிவுபடுத்தப்படல்வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) எமது மாணவர்கள் எமது வரலாற்றைக் கற்றுத் தெரிந்து கொள்ளவேண்டும். பெருமைகொள்ளவேண்டும்.

11) வரலாற்றின் இன்றியமையாமையை, அதன் பயனை மாண வர்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.

12) எமது மாணவர்களுக்கு வரலாற்றுக்கடமையை உணர்த் துதல் வேண்டும்.

13) நாம் படிக்கும் சமூகவியல் எமது வாழ்க்கைக்குப் பயன் படவேண்டும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு 06

## இயல்: 01

# தேசியப்பண், தேசியக்கொடி, தேசியக்கோட்குறி

### குறிக்கோள்கள்:

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் அறிந்துகொள்வர்

01) நாம் தமிழீழத்தேசிய இனத்தவர் என்பதை அறிந்து கொள்வர்.

02) தேசிய உணர்வையும் நாட்டுப்பற்றையும் வளர்க்கத் தேசியப்பண், தேசியக்கொடி, தேசியக்கோட்குறி என்பன பெரிதும் துணையாகின்றன என்பதை விளங்கிக்கொள்வர்.

03) தேசியப்பண், தேசியக்கொடிவணக்கப்பண் என்பவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகளை அறிந்துகொள்வர்.

04) தேசியக்கொடிவணக்கப்பண்ணை முழுமையாக இசையோடு பாடத் தெரிந்துகொள்வர்.

05) தேசியக்கொடியின் தன்மைகளை நன்கு தெரிந்துகொள்வர்

06) தமிழீழத்தேசியக்கொடி பற்றியும் அதனைப் பயன்படுத்தும் முறை வேளை என்பவைபற்றியும் தெரிந்துகொள்வர்.

07) தமிழீழத் தேசியக்கொடிக்கு வழங்கவேண்டிய மதிப்பு, தேசியக்கொடி சுட்டிநிற்கும் கொள்கைகளை நன்கு விளங்கிக் கொள்வர்.

08) தேசியக்கோட்குறி (இலச்சினை) பற்றியும் எமக்கான தேசியக்கோட்குறி இன்னும் ஆக்கப்படவில்லை என்பதைப்பற்றியும் தெரிந்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்: 02

# தமிழீழ நாடும் விடுதலைப் போராட்டமும்

## குறிக்கோள்கள்:

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் அறிந்துகொள்வர்

01) தமிழீழநாட்டையும் அதன் பரப்பையும் அறிந்துகொள்வர்

02) ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் பல நூற்றாண்டுகளாகத் தமிழரின் தனிநாடாகத்தமிழீழம்(யாழ்ப்பாண அரசு) இருந்துவந்ததை அறிந்துகொள்வர்.

03) போர்த்துக்கேயரின் வன்கவர்வு(ஆக்கிரமிப்பு)முயற்சிகளைத் தமிழரின் யாழ்ப்பாண அரசு முறியடித்து வந்ததுபற்றி அறிந்துகொள்வர்.

04) இன இரண்டகர்களின் காட்டிக் கொடுப்புகளினாலும் சிங்களக் கூலிப்படைகளின் உதவியினாலும் 1619 இல் யாழ்ப்பாண மன்னன் வெற்றி கொள்ளப்பட்டான் என்பதை அறிந்துகொள்வர்.

05) 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை வன்னிப்பகுதியிலே தமிழராட்சி நிலவியது பற்றியும் 1811ஆம் ஆண்டில் பண்டாரவன்னியன் என்னும் தமிழ்மன்னன் ஆங்கிலேயருக்கெதிரான போரில் வீரச்சாவடைந்தான் என்பது பற்றியும் அறிந்து கொள்வர்.

06) இலங்கைத்தீவில் நீண்டகாலமாகத் தனித்தனி நிலவிய யாழ்ப்பாண அரசு உட்படப் பல அரசுகளை ஆங்கிலேயர் 1833 ஆம் ஆண்டில் ஒன்றிணைத்து 115 ஆண்டுகாலம் ஆண்டனர் என்பதைத் தெரிந்துகொள்வர்.

07) 1948 ஆம் ஆண்டில் இலங்கைத்தீவின் ஆட்சியுரிமையை ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவர்கள் பெற்றுக்கொண்டனர் என்பதை அறிந்துகொள்வர்.

08) சிங்களவர்கள் ஆட்சியில் தமிழ்மக்கள் தமது வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்து உரிமைகளையும் இழந்து அடிமைப் படுத்தப்பட்டதை அறிந்துகொள்வர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) உரிமைப் பறிப்புகளுக்கெதிராகத் தமிழீழ மக்கள் அமைதி வழிப் போராட்டங்களை நடத்தினர் என்பதை அறிந்து கொள்வர்.

10) தமிழ்மக்களின் அமைதிவழிப் போராட்டங்கள் சிங்கள அரசுப் படையினரால் நசுக்கப்பட்டதை அடுத்து, தமிழி ளைஞர்களின் படைக்கலமேந்திய விடுதலைப்போராட்டம் 1972ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுவருவதை அறிந்து கொள்வர்.

11) பல்வேறு இறைநெறி (சமயம்) களைப் பின்பற்றும் மக் கள் தமிழீழக் குடிமக்களாக வாழ்ந்துவருகின்றனர் என் பதை அறிந்துகொள்வர்.

# இயல்: 03

## இலங்கையின் முதற்குடிகள்

### குறிக்கோள்கள்:

**பின்வருவனவற்றை எமது மாணவர்கள் அறிந்து கொள்வர்**

01) இலங்கையின் முதற்குடிகள் பற்றிய பௌத்த நூல்கள் தவ றான விளக்கங்களைத் தருகின்றன என்பதை விளங்கிக் கொள்வர்.

02) இலங்கையின் முதற்குடிகளான இயக்கர், நாகர், திராவிட ரென்பதை அறிவர்.

03) விஜயனின் பிறப்புப் பற்றிய கதை கட்டுக்கதை என்பதை விளங்கிக்கொள்வர்.

04) விஜயன் நாடு கடத்தப்பட்டதன் கரணியத்தை (கார ணத்தை) விளங்கிக்கொள்வர்.

05) குவேனியின் இரண்டகத்தையும் (துரோகத்தையும்) அத னால் ஏற்பட்ட விளைவுகளையும் மதிப்பிடுவர்.

06) விஜயன் தமிழ்நாட்டுடன் மண உறவு வைத்திருந்ததை அறிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) பாண்டுகாபயன் (பந்துகாபயன்) கதைகளிலுள்ள புரளிகளைப் புரிந்துகொள்வர்.

08) இலங்கைத்தீவின் முதற்குடிகளான இயக்கர், நாகரின் சமூக பொருளாதார பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை விளங்கிக்கொள்வர்.

09) இலங்கைத்தீவில் முதற்குடிகள் வாழ்ந்த இடங்களைப் படத்திற் குறித்துக்காட்டுவர்.

10) இலங்கையின் முதற்குடிகள் தமிழர்களென்பதை வெளிப்படுத்தும் தொல்பொருட் சான்றுகளைக் குறிப்பிடுவர்.

# இயல்: 04

## எல்லாள மாமன்னன்

### குறிக்கோள்கள்:

**பின்வருவனவற்றை எமது மாணவர்கள் அறிந்துகொள்வர்**

01) எல்லாளமன்னனுக்கு முன்னரும் இலங்கைத்தீவிலே தமிழர் ஆட்சி நடைபெற்றதை அறிவர்.

02) எல்லாளமன்னன் ஆட்சியைச் சிங்கள மன்னரும் ஏற்றிப் போற்றினரென்பதை அறிவர். நாட்டு நலன் பேணும் உணர்வுகளைப் பெறுவர்.

03) எல்லாளமன்னனின் இறைநெறி நடுநிலைப் (சமயசமத்துவப்) பண்புக்கு எடுத்துக்காட்டுதலைக் கூறுவர்.

04) துட்டகைமுனு எனும் பெயர் வருவதற்கான கரணியங்களை (காரணங்கள்) அறிவர்.

05) துட்டகைமுனு சூழ்ச்சியினால் எல்லாளனை வென்றானென்பதை விளங்கிக்கொள்வர்

06) போரில் வெற்றிபெற இறைநெறி (மத) வெறி இனவெறி எனபவற்றைக் கருவிகளாகத் துட்டகைமுனு பயன்படுத்தினானென்பதை அறிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்: 05

# இலங்கை-தென்னிந்திய அரசியலுறவு

## குறிக்கோள்கள்:

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் அறிந்துகொள்வர்

01) நாடுகளுக்கிடையிலான அரசியலுறவு பற்றியும் இலங்கைக்கும் - தென்னிந்தியாவுக்கும் இடையே வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே அரசியலுறவு நிலவிவந்தது பற்றியும் அறிந்துகொள்வர்.

02) இலங்கை - தென்னிந்திய (தமிழக) அரசியலுறவு நிலவியமைக்கான கரணியத்தை (காரணயத்தை)த் தெரிந்து கொள்வர்.

03) இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு சிற்றரசுகள் நிலவின என்பதை அறிந்துகொள்வர்.

04) பண்டைக்காலம் தொட்டு இலங்கையில் தமிழ்மன்னர்களும் சிங்களமன்னர்களும் மாறிமாறி ஆட்சிபுரிந்து வந்துள்ளனர் என்பதைத் தெரிந்துகொள்வர்.

05) அனுராதபுரத்தில் முதல் 250 ஆண்டுகாலம் ஆட்சிபுரிந்த 22மன்னர்களுள் 10 தமிழ் மன்னர்கள் 82 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்தனர் என்பதை அறிந்துகொள்வர்.

06) கி. மு. 2ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டி நாட்டிலிருந்து எழுவர் படையெடுத்துவந்து துட்டகைமுனுவின் தம்பி மகனான வட்டகாமினியைத் தோற்கடித்து 27 ஆண்டுகள் ஆட்சிபுரிந்ததை அறிந்துகொள்வர்.

07) கி. பி. 2ஆம் நூற்றாண்டில் காவிரி ஆற்றுக்கு அணை கட்டுவதற்காக இலங்கையிலிருந்து 12,000 சிங்களவர்களைக் கரிகாற்சோழன் பிடித்துச் சென்றான் என்பதை அறிந்துகொள்வர்.

08) அறகம கதிர்காமக்கல்வெட்டுகளில் இருந்து கி. பி. 5ஆம் நூற்றாண்டில் தென்னிலங்கையிலும் உருகுணைவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழராட்சி நிலவியமை உறுதிப்படுத்தப்படுவதை அறிந்து கொள்வர்.

09) கி. பி. 7, 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையிற் சைவ நெறி தழைத்தோங்கி வளர்ந்ததை அறிந்துகொள்வர்.

10) கி. பி. 9ஆம் நூற்றாண்டில் 1ஆம் சேனன் மீதான பாண்டியப் படையெடுப்பில் இலங்கையிலிருந்த தமிழர்களும் பாண்டியர்களுக்கு உதவியாகக் கலந்துகொண்டனர் என்பதை அறிந்துகொள்வர்.

11) கி. பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட சோழர் படை எடுப்பினால் இலங்கை முழுவதும் 82ஆண்டுகள் சோழராட்சி நிலவியதை அறிந்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக்கல்வியும் வரலாறும்

## ஆண்டு 6 - ஆசிரிய வழிகாட்டி

## இயல்: 01

### தேசிய உணர்வும் நாட்டுப்பற்றும்

தேசிய உணர்வும் நாட்டுப்பற்றும் குடிமக்கள் அனைவருக்கும் தேவையானவை, எல்லோராலும் கடைப்பிடிக்கப்படவேண்டியவை, உயர்வானவை, தூய்மையானவை என்பவை மாணவர்களுக்கு எடுத்து விளக்கப்படவேண்டும். நாடுகாத்த சிறுவன் கதை, புறநாநூற்று வீரத்தாயின் கதை போன்ற கதைகளைக் கூறுவதனூடாக மாணவர்களுக்கு நாட்டுப்பற்றையும் தேசிய உணர்வையும் ஏற்படுத்தலாம்.

### தேசியப்பண்

தேசியப்பண், தேசியக்கொடி வணக்கப்பண் என்பவற்றுக்கிடையில் உள்ள வேறுபாட்டை மாணவர்களுக்கு விளங்கப்படுத்தல் வேண்டும்.

எமது தேசியக்கொடியை ஏற்றும்போது மட்டும் தேசியக் கொடி வணக்கப்பண் பாடப்படும். தேசியக்கொடி ஏற்றாமல் நிகழ்ச்சிகள் தொடங்கப்படும்போதும் தேசியப்பண் பாடப்படலாம்; ஆனால் தேசியக்கொடி ஏற்றாத நேரங்களில் தேசியக் கொடி வணக்கப்பண் பாடப்படுவதில்லை என்பதையும் எமக்கென இன்னும் தேசியப்பண் ஆக்கப்படவில்லை என்பதையும் மாணவர்களுக்கு விளங்கப்படுத்தல் வேண்டும்.

### தேசியக்கொடி

தேசியக்கொடிக்கு நாட்டுக்குடிமக்கள் அனைவரும் வழங்க வேண்டிய மதிப்பு மரியாதை பற்றி மாணவர்களுக்கு எடுத்து விளக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியக்கொடியை எவ்வெக் காலங்களில் எப்படிப் பயன் படுத்துவது என்பதைப் பற்றிப் பள்ளிகளில் இருக்கும் தேசியக் கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்னும் நூலின் உதவியுடன் மாணவர்களுக்கு நன்கு விளங்கப்படுத்துதல் வேண்டும்.

தேசியக்கொடியில் உள்ள மஞ்சள் நிறம் எதனைக் குறிக்கின்றது என்பது பாடநூலிலே தவறவிடப்பட்டுள்ளது. தமிழீழ மக்கள் நடத்துகின்ற தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின் பாற்பட்டது, நியாயமானது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது என்னும் விளக்கத்தை மாணவர்களுக்கு எடுத்துக்கூறுதல்வேண்டும். தேசியக்கொடியின் பெருமையை விளக்கக் கொடி காத்த திருப்பூர்க்குமரன் கதை போன்ற கதைகளைப் பயன் படுத்தலாம்.

## தேசியக் கோட்குறி (இலச்சினை)

இலச்சினை என்பது வடசொல்லாகையால் கோட்குறி எனும் தமிழ்ச்சொல் வழங்கப்படுகிறது.

தேசியக்கோட்குறி பற்றி மாணவர்களுக்கு விளக்குவதற்கு இந்திய இலங்கை அரசுகளின் கோட்குறிகளை மாணவர்களுக்குக் காட்டலாம். இப்போது எமக்குக் கோட்குறி இல்லை; நாம் எமது நாட்டு அரசுக்கென, அரசு அமைக்கப்பட்டதன்பின் எமது கோட்குறியை அமைத்துக்கொள்வோம் என மாணவர்களுக்கு விளங்கப்படுத்துதல் வேண்டும்.

# இயல்: 02

# தமிழீழ நாடும் தேசிய விடுதலைப் போராட்டமும்

*இரண்டகர் - துரோகிகள் (வடசொல்)*

துரோகிகள் என்பது வடசொல்லாகையால் இரண்டகர் என்னும் தமிழ்ச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

*1505இல் ஐரோப்பியர் வந்தபோது இலங்கைத்தீவில் 3 அரசுகள் இருந்தன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. யாழ்ப்பாணத் தமிழரசு
2. கோட்டைச் சிங்கள அரசு
3. கண்டிச் சிங்கள அரசு

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கைத்தீவின் கரையோரப்பகுதிகளான கோட்டை யாழ்ப்பாணப்பகுதிகளைக் கைப்பற்றினர். கண்டிப்பகுதிகள் இயற்கையரண்களான மலைகளையும் காடுகளையும் கொண்டிருந்ததால் அதனைக்கைப்பற்ற முடியவில்லை.

ஆயினும் இறுதியாக வந்த ஆங்கிலேயர் கண்டிப் பகுதியையும் 1815இல் கைப்பற்றினர்.

- 1833இல் இலங்கைத்தீவின் மூன்று அரசுப்பகுதிகளையும் இணைத்து ஒரே நாடாக்கினர்.
- 1948 இல் சுதந்திரம் என்ற பெயரில் ஆங்கிலேயர் தமிழர் விருப்புக்கு மாறாகச் சிங்களவரிடம் இலங்கைத்தீவின் ஆட்சியுரிமையைக் கையளித்துச் சென்றனர்.
- 1948 - 1949 இல் மலையகத் தமிழரின் குடியுரிமை, வாக்குரிமைகள் சிங்கள ஆட்சியாளராற் பறிக்கப்பட்டன. அதன்பின் தமிழ் மக்களின் வாழ்விடங்கள் வலுக்கட்டாயமாகப் பிடுங்கப்பட்டு அவ்விடங்களிற் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- 1956 இல் தமிழ்மொழி உரிமைகள் மறுக்கப்பட்டுச் சிங்கள மொழி மட்டும் நாட்டின் ஆட்சிமொழியாக்கப்பட்டது.
- 1970 இல் தரப்படுத்தல் எனும் திட்டத்தினால் தமிழ் மாணவர்களின் உயர்கல்வி உரிமை மறுக்கப்பட்டது.
- 1972 இல் தமிழரின் உரிமைப் பறிப்புக்களுக்கெதிராக நடத்தப்பட்ட அமைதிவழிப் போராட்டங்கள் (மறியல், உண்ணாநோன்பு, கடையடைப்புப் போன்றவை) சிங்கள ஆயுதப் படையினரால் நசுக்கப்பட்டன அதுமட்டுமன்றி ஒட்டடக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாள்ப்பாள் என்பதுபோல இழந்த உரிமைகளைத் தமிழர் கேட்டுக்கொண்டிருக்கையில் ஆங்கிலேயரின் அரசியலமைப்பில் இருந்துவந்த சிறிதளவு உரிமைகளையும் பறிக்கும் குடியரசு அரசியற்சட்டம் சிறிமாவோ பண்டாரநாயக்காவாற் கொண்டுவரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனையடுத்துத் தமிழ்மக்களை அடிமைப்படுத்தும்அரசியற் சட்டத்தை எதிர்த்துத் தமிழ் இளைஞர்களின் படைக்கலமேந்திய (ஆயுதமேந்திய) வன்முறைப்போராட்டம் தொடங்கியது. அவ் விளைஞர்களிற் பலர் சிங்கள அரசினதும் படைகளினதும் அடக் குமுறைகளுக்கு எதிர் நிற்கமுடியாது போராட்டத்தினின்றும் பின்வாங்கினர்; ஆயினும் தொடக்க காலத்திலிருந்து தொடர்ச் சியாகச் சிங்களப்படைகளை எதிர்த்துத் துணிச்சலோடு போரா டிவருபவர் திரு. வே. பிரபாகரன் அவர்களாவர்.

திரு. வே. பிரபாகரன் அவர்களது தலைமையில், இழந்த தமி ழரின் நாடான தமிழீழத்தை மீட்பதற்கெனக் கால்நூற்றாண் டுக்கு மேலாகத் தமிழீழ விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது,

தமிழீழத்தின் பகுதிகள் எவை? தமிழீழம் எவ்வளவு நிலப் பரப்பளவைக் கொண்டது? எத்தனை மாவட்டங்களைக் கொண்டது? என்பவை பற்றி மாணவர்களுக்கு எடுத்து விளக் கவேண்டும்.

வடமாகாணம் - யாழ்ப்பாணம், (983 ச. கி. மீ.), கிளி நொச்சி (1235 ச. கி. மீ.), முல்லைத்தீவு (2517 ச. கி. மீ.), வவுனியா (1967 ச. கி. மீ.), மன்னார் 1985 ச. கி. மீ.)

கிழக்கு மாகாணம் - திருகோணமலை (2631 ச. கி. மீ.), மட் டக்களப்பு (2586 ச. கி. மீ.), அம்பாறை (4350 ச. கி. மீ.)

வடமேல் மாகாணம் - புத்தளம் மாவட்டக் கரையோரப்பகுதி கள் மட்டும் (1700 ச. கி. மீ.)
இவற்றில் அண்ணளவாக 7500ச. கி. மீ. இற்கும் கூடுதலான பகுதிகள் சிங்களக் குடியேற்றங்களினாற் பறிபோயுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்: 03

## இலங்கையின் முதற்குடிகள்

பௌத்தநெறியை மேன்மைப்படுத்தும் நோக்கோடு பாளி மொழியில் எழுதப்பட்ட பௌத்த நூல்கள் புத்தர் இலங்கைக்கு 3 தடவைகள் வந்தார் என்று கூறுவதிற் பெருமை கொண்டன.

## புத்தரின் மூன்று வருகைகள்

1) இலங்கையிலே தமது அறநெறியைப் புகட்டுவதற்காக (இயக்கர்கள் இருந்த இலங்கையின் மையப் பகுதியான மகியங்கனைக்கு) நேரில் வந்தார்.

2) நாக அரசு குடும்பத்தைச் சேர்ந்த மகோதரன், குலாதரன் ஆகியோருக்கிடையில் அரியணை தொடர்பாக ஏற்பட்ட போரை விலக்கிவைக்க நாகதீபத்துக்கு (யாழ்ப்பாணத்துக்கு) வந்தார்.

3) நாக மன்னன் மணியக்கிகனது வேண்டுகோளையேற்று கல்யாணிக்கு (இன்றைய களனி) வருகைதந்தார். அவ்வருகையின்போது சிறீபாத மலையிற் காலடிபதித்து விட்டுத் தீகவாபிக்கும் வந்தார்.

மகாவம்சத்தின் கூற்றுப்படி புத்தரின் முதல் வருகையின் போது இலங்கைத்தீவின் நடுப்பகுதிகளில் இருந்த இயக்கர்களுக்கு அறநெறி புகட்டவந்தார். நாகமன்னர்களுக்காக இரண்டாம் மூன்றாம் தடவையாக வருகை தந்தார்.

புத்தரின் 3ஆவது வருகையின்பின் 37 ஆண்டுகள் கழித்தே புத்தர் உலக வாழ்வை நீத்தார். அன்றுதான் விஜயன் இலங்கைக்கு வந்ததாக மகாவம்சத்திற் கூறப்படுகிறது. எனவே விசயன் வருகைக்குப் பல ஆண்டுகளுக்கு முன் (திராவிட இனத்தின் முன்னோடிகளான) இயக்கர்கள் வாழ்ந்து வந்ததும் நாகர்கள் சிறப்புற ஆட்சிநடத்தி வந்ததும் மகாவம்சத்தாலேயே உறுதிப்படுத்தப்படுகிறது.

இயக்கர்களும் நாகர்களும் திராவிட இனத்தவர்களே தமிழர்களே என்பது மணிமேகலை போன்ற பல்வேறு இலக்கியச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுகளினாலும் ஊர்ப்பெயர்கள் ஆட்பெயர்கள் பயன்படுத்தப்படும் நிலையிலிருந்தும் அறிந்துகொள்ளலாம். தமிழர்கள் பயன்படுத்தும் நாகர்கோவில், நாகதீபம், நாகதேவன்துறை, நாகபட்டினம், நாகநாடு நாகபுரம் போன்ற தமிழ் ஊர்ப் பெயர்கள் தமிழர்கள் பயன்படுத்தும் நாகன், நாகி, நாகரத்தினம், நாகராசா, நாகமுத்து, நாகமணி, நாகநாதன், நாகலிங்கம், நாகம்மா, நாகம்மாள், நாகேந்திரம், நாகப்பன், நாகேஸ்வரி, நாகேஸ்வரன் மற்றும் பல பெயர்களிலிருந்தும் அறிந்துகொள்ளலாம்.

சங்கப் புலவர்களில் 18 ஆண் பெண்பாற் புலவர்கள் நாக எனத் தொடங்கும் பெயருடன் இருந்திருக்கின்றனர். தமிழர்கள் நாக வழிபாட்டை நீண்டகாலமாக மேற்கொண்டுவருபவர்கள். இவையெல்லாம் நாகர்கள் தமிழர்களே என்பதை உறுதி செய்கின்றன.

கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் தமிழகத்தின் ஆதித்த நல்லூர் அரிக்கன்மேடு ஆகிய பகுதிகளின் அகழ்வாய்வுகளின்போது பெருமளவிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதையொத்த பொருட்கள் ஏராளமாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கந்தரோடை, ஆனைக்கோட்டை, களபூமி (காரைநகர்), வேலணை, மண்ணித்தலை பூநகரி, மாந்தை மற்றும் பல இடங்களிலே தொல்லியற்பொருட்களான மட்கலங்கள், ஈமத்தாழிகள் போன்ற ஒரேவகையான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே தமிழகத்திலும் ஈழத்திலும் ஒரேவகையான மக்கள் (தமிழர்கள்) விசயன் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்திருக்கின்றனர் என்பது உறுதியாகின்றது.

## நம்பமுடியாத விசயனின் கதை

விசயனின் பிறப்புப்பற்றிய கதை நடக்கமுடியாதது நம்புதற்கரியது என்பதை அக்கதையைப் படித்துப்புரிந்த அனைவரும் ஒப்புக்கொள்வர். மென்டிசு போன்ற சிங்கள வரலாற்றறிஞர்களே விசயன் பிறப்புப் பற்றிய கூற்றை ஏறக மறுக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசயனின் தந்தை ஒரு சிங்கத்துக்கும் பெண்ணுக்கும் பிறந்தவன் என்பதைச் சமூகவியல், உடலியல் போன்ற எவற்றினாலும் ஏற்கமுடியாது.

## விசயனின் நாகரிகச் சிறப்பு

எமது நாட்டுக்கு நாகரிகத்தை அறிமுகப்படுத்தியவன் என்று மகாவம்சப் போக்கைக் கொண்ட வரலாற்றாளர்களாற் குறிப்பிடப்படும் விசயனின் நாகரிகச் சிறப்பை மகாவம்சத்திலிருந்தே அறிந்துகொள்ளலாம்.

- விசயனின் பாட்டி அழகி. காமவெறி பிடித்தவள், வங்க அரசனும் அரசியும் மானக்கேட்டினால் மகளான அவளைத் தம்முடன் வைத்திருக்கமாட்டாதவர்களாக இருந்தனர்.
மகாவம்சம் (6 : 2)

- விசயனின் தந்தை சிங்கத்துக்குப் பிறந்தவன்
மகாவம்சம் (6: 5: 9)

- பணத்துக்காக விசயனின் தந்தை தன் தந்தையை (சிங்கத்தை)க் கொன்றவன் மகாவம்சம் (6 : 24-30)

- விசயனின் தந்தை தன் தங்கையை மணந்தவன்
மகாவம்சம் (6 : 36)

- விசயனின் தாய் தன் அண்ணனை மணந்தவள்
மகாவம்சம் (6 : 3)

- விசயனின் தாய், தந்தை, பாட்டி அனைவரும் 16 ஆண்டுகளாக ஆடையே (இலைதழைகூட) அணியாதவர்களாக ஒரே குகையில் வாழ்ந்தனர் மகாவம்சம் (6 ; 14)

- விசயன் பல கொடுஞ்செயல்கள் புரிந்து நாட்டுமக்களின் கடும் எதிர்ப்பினால் தன் தந்தையான சிங்கவாகுவினால் மொட்டையடிக்கப்பட்டு (அவனது 700 தோழர்களுடன்) நாடுகடத்தப்பட்டவன். மகாவம்சம் (6 : 41-43

- விசயன் மரக்கலத்திற் கடலிலே தத்தளித்து இலங்கைக் கரையிலே ஒதுங்கியபோது புகலிடம் கொடுத்துத் தன்னையும் கொடுத்து (மணந்துகொண்டு) தனது ஆட்சியையும் கொடுத்த மனைவியான குவேனியையும் பிள்ளைகளையும் ஓராண்டுக்குள் விரட்டியடித்துவிட்டு மறுமணம் புரிந்தவன்.
மகாவம்சம் (6 : 41-43)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் எமது நாட்டுக்கு நாகரிகத்தைக் கொண்டுவந்தவன் என்பது நகைப்புக்கிடமானது.

## விசயனின் தமிழ்நாட்டுடனான மண உறவு

விசயன் தனது முதல் மனைவியான குவேனியைப் பிள்ளைகளோடு விரட்டியடித்துவிட்டு முடிசூடிக்கொள்ளும் போது சத்திரியகுலப்பெண்ணை மணக்கவேண்டும் என்ற அரசமரபைப் பேணும்பொருட்டு மதுரையில் இருந்த பாண்டியமன்னனுக்குத் தூதனுப்பிப் பாண்டிய இளவரசியை மணந்துகொண்டான்.

மகாவம்சம் (7: 49-72)

## பாண்டுகாபயனின் கதை

○ மகாவம்சத்தில் வரும் பாண்டுகாபயனின் கதை விஷ்ணு புராணத்தின் கம்சன்கிருட்டிணன் கதையைப்போன்று இருக்கிறது (தங்கையின் பிள்ளையால் மாமனுக்கு உயிர் பறி போகும் என்ற கதை)

மகாவம்சம் (9ஆம் 10ஆம் இயல்கள்)

## பெருங்கற்பண்பாடு பற்றிய தொல்லியலாய்வுகள்

பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருளக ஆய்வாளர்கள் 1967 இல் கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வின்போது பெருங்கற் பண்பாட்டுக்குரிய மட்கலங்கள் பலவற்றைக் கண்டுபிடித்தனர். அதைத்தொடர்ந்து மேலும் பலர் அங்கு மேற்கொண்ட தொல்லியலாய்வுகளின்போது கி.மு. 1000ஆம் ஆண்டுகளுக்கு முந்திய பொருட்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. யாழ்ப்பாணத் தொல்லியற்கழகமும் பல்கலைக்கழகமும் இணைந்து மேற்கொண்ட அகழ்வாய்வுகளின் போது ஆனைக்கோட்டை, களபூமி (காரைநகர்), வேலணை போன்ற இடங்களிற் பெருங் கற்பண்பாட்டுக்குரிய பல தொல்லியற் பொருட்கள் பெறப்பட்டன. இறுதியாகப் பூநகரிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின்போது கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா, பல்லவராயன் கட்டுப் போன்ற பகுதிகளிலும் பல பொருட்கள் பெறப்பட்டன. அனுராதபுரப் பகுதியிலும் இதுபோன்ற பல பொருட்கள் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களுக்கான கூடுதலான குறிப்புக்கள்

சொற்களுக்கான பொருள்:

★ அமானுஷ்யர்கள் - மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவர்கள்

★ கரிவம்சம் - மகாபாரதம் போன்ற ஒரு கதை

★ கடஜாதக - புத்தரின் பிறப்புக்கள் தொடர்பான வடநாட்டின் ஜாதகக் கதைகளில் ஒன்று

★ தாழிகள் - மண்ணாற் செய்யப்பட்ட கலங்கள், மட்கலங்கள், சாடிகள்

★ ஈமத்தாழிகள் - இறந்தவர் உடலை வைத்து மண்ணில் புதைக்கும் தாழிகள்

★ கற்றிட்டைகள்
கல்மேசைகள் - மேசை போன்று பயன்படுத்த ஒழுங்கு படுத்தப்பட்ட கல்மேடை

★ கல்வட்டங்கள் - உடல்களை அடக்கஞ்செய்த இடத்தை அடையாளம் காட்டும் கல்லடுக்கு

★ நீளக்கிடத்திகள் - உடலைக் கிடையாகக் கிடத்திப் புதைக்கும் ஈமத்தாழிகள்

# இயல்: 04

## எல்லாளமாமன்னன்

தேரவாத பௌத்தநெறியையும் அதைப் பேணிய அரசர்களையும் பற்றி மட்டும் விரிவாகக் கூறுகின்ற மகாவம்சத்திலே சைவநெறியை மேற்கொண்ட தமிழரசனான எல்லாளமாமன்னனைப் பற்றிச் சில குறிப்புக்கள் கூறப்படுகின்றன! மகாவம்சத்தின் காவியத்தலைவனான துட்டகைமுனு பெரு முயற்சியு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் போரிட்ட எதிரி என்கின்ற வகையில் காவியத் தலைவ னின் பெருமையை உயர்த்த எதிரியின் ஆற்றலையும் உயர்த்திக் காட்டவேண்டும் என்பதால் எல்லாளனைப் பற்றிச் சில குறிப் புக்கள் கூறவேண்டிய கட்டாயம் மகாவம்ச ஆசிரியருக்கு ஏற் பட்டுவிட்டது.

எல்லாளமன்னன் ஆட்சியைத் தொடங்கிய காலத்துக்கு (கி. மு. 205இற்கு) 32 ஆண்டுகளுக்கு முன்னர் கி. மு. 237இல்) சேனன், குத்திகன் என்னும் இரு தமிழர்கள் அனுராதபுரத் தில் ஆட்சி நடத்தியது பற்றி மகாவம்சம் குறிப்பிடுகிறது. அவர் களது ஆட்சி 22 ஆண்டுகள் நீடித்தது, அனுராதபுரம் தவிர இலங்கையின் வடபகுதியிலேயும் வேறுபகுதிகளிலேயும் தமிழ ராட்சி நடந்திருக்கின்றது. மகாவம்சம் அதுபற்றிக் குறிப்பிட வில்லை.

எல்லாளனது ஆட்சியில் எதிரிகள் நண்பர்கள் என்ற வேறு பாடின்றி அனைவரும் சமமாக நடத்தப்பட்டனர். எப்போதும் எவரும் எல்லாளமன்னனிடம் முறையீடு செய்வதற்காக அழைப் புமணி ஒன்றைக் கட்டி வைத்திருந்தான் என்றும், மக்களின் பல்வேறு குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைத்தான் என் றும் ஆவின் (பசுவின்) கன்றை ஊர்தியினால் மோதிக்கொன்ற தனது மகனை ஊர்தி உருளியினால் (தேர்ச்சில்லினால்) நெரித் துக்கொல்வித்தான் என்றும் சேதியபர்வதத்தின் சில கற்கள் தன் ஊர்தியின் நுகத் தடியினாற் பெயர்க்கப்பட்டதை அறிந்து தன் னையும் ஊர்தியினால் நெரித்துக் கொல்லும்படி அமைச்சர் களுக்குக் கட்டளையிட்டான் என்றும் மகாவம்சம் கூறுகிறது.

எல்லாளன் ஆட்சியைப் புகழ்ந்தது போன்று வேறு எந்த அரசனின் ஆட்சியையும் மகாவம்சம் புகழவில்லை என்றே கூற லாம். ஆயினும் எல்லாளனது 44ஆண்டுகால அரசியற் செயற் பாடுகளை மகாவம்சம் முற்றாக இருட்டடிப்புச் செய்துவிட்டது. எல்லாளன் ஆட்சிக்காலத்தில் வரட்சி நிலவவில்லை. நீர் நிலை களில் மழைநீர் நிரம்பியிருந்தது என்று கூறிய மகாவம்சம் எல்லாளன் கட்டிய குளங்களைப் பற்றி அவன் மக்களுக்குச் செய்த பணிகளைப் பற்றி எதுவும் கூறவில்லை.

வவுனிக்குளத்தை எல்லாளன் வெட்டுவித்தான் என்றும் பாவற்குளம், இரணைமடுக்குளம் ஆகியவற்றின் முதல்வடிவம் எல்லாளனாலேயே வெட்டப்பட்டிருக்கவாம் என்றும் ANCIENT CEYLON எனும் நூலை எழுதிய H. PARKER உட்படப் பல வெளிநாட்டறிஞர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "துஷ்டச்" செயலால் துட்டகைமுனுவானான்

காகவண்ணதீசனின் மூத்த மகனான கைமுனு தந்தையின் விருப்புக்கு மாறாக எல்லாளனுடன் போர் தொடக்க விரும்பினான். தந்தையிடம் மூன்று தடவை கேட்டு அவன் மூன்று தடவையும் மறுக்கவே தந்தையைப் பேடியென இகழ்ந்து பெண்கள் அணியும் அணிகலன்களையும் சேலையையும் அணிந்து கொள்ளும்படி தந்தைக்கு அனுப்பிவைத்தான். இத்தகைய "துஷ்டச்" செயலைப் புரிந்ததால் துட்டகைமுனு என அழைக்கப்பட்டான்

## முறையற்ற சூழ்ச்சிப் போரினாலேயே துட்டகைமுனு எல்லாளனை வென்றான்

44 ஆண்டுகளாக நீதி தவறாது ஆட்சிசெய்து மக்களின் பெருமதிப்பைப் பெற்றிருந்த எல்லாளனை முறையான போரினால் வெற்றிகொள்ள முடியாது என்பதை நன்குணர்ந்த துட்டகைமுனு புத்தபிக்குமாருடனும் தன்தாயான விகாரமாதேவியுடனும் சேர்ந்து சூழ்ச்சி செய்து முறையற்ற போரினாலேயே எல்லாளனை வென்றான் என்பதை மகாவம்சமே ஒப்புக்கொள்கிறது.

◉ தித்தம்பன் என்ற எல்லாளனின் படைத்தலைவனை எதிர்த்து 4 மாதங்களாகக் கடுமையாகப் போரிட்டபோதிலும் துட்டகைமுனுவால் அவனை வெற்றிகொள்ள முடியவில்லை. ஈற்றில் தாய் விகாரமாதேவியை முன்னிறுத்திச் சூழ்ச்சிப்போர் புரிந்தே சித்தம்பனைத் துட்டகைமுனு வெற்றிகொண்டான். மகாவம்சம் (25; 8-9)

◉ மூன்று புறமும் அகழியாற் சூழப்பட்ட மகிளநகரக்கோட்டையை 4 மாதமாக முற்றுகையிட்டபோதிலும் வெற்றிகொள்ளமுடியாத நிலையில், துட்டகைமுனு சூழ்ச்சியாகப் போரிட்டே எல்லாளனின் படைத்தலைவனை வென்றான்; மகாவம்சம் (25: 48-49)

◉ எல்லாளன் போர்க்களத்துக்கு வருகிறான் என்றதும் தாய் விகாரமாதேவியின் சூழ்ச்சியின்படி தன்போன்ற 32 போலியுருக்களை முன்னிறுத்திய துட்டகைமுனு படையின் பின்னணியிலேயே சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◉ எல்லாளனின் படைத்தலைவன் தீகஜந்துவாலே துட்டகை முனுவின் போலியுருக்கள் அனைத்தும் அடித்து வீழ்த்தப் பட்டன. தீகஜந்து துட்டகைமுனுவை நெருங்கும்போது துட்டகைமுனுவின் படைத்தலைவனான சூரநிமிலன் அவனைத் தன்னுடன் போருக்கு வருமாறு கூவியழைத்து தீகஜந்துவைத் திசைதிருப்பிச் சினமூட்டிக் கொன்றான்.

மகாவம்சம் (25: 54-64)

◉ 72 அகவையுடைய எல்லாளனைத் தனிப்போருக்கழைத்து 44 அகவையுடைய துட்டகைமுனு முறையற்றபோர்புரிந்து எல்லாளனது யானையைத் தாக்கி அவனைக் கீழே விழுத்திக்கொன்றான். மகாவம்சம் (25:69-70)

◉ எல்லாளனுக்குத் துணையாகத் துட்டகைமுனுவை எதிர்க்கவென 60,000 படையினருடன் வந்த தீகஜந்துவின் மருமகனான பாலுகன், எல்லாளன் இறந்த ஏழாவது நாளே அனுராதபுரம் வந்து சேர்ந்தான். துட்டகைமுனுவுக்கும் பாலுகனுக்கும் கடும் போர் மூண்டது. துட்டகைமுனுவைப் பாலுகன் நேருக்குநேர் எதிர்கொண்டான்.

◉ துட்டகைமுனுவின் பட்டத்துயானை பின்வாங்கியது. துட்டகைமுனுவின் படைகளும் பின்வாங்கத் தொடங்கின. துட்டகைமுனுவுக்குப் பின்னே ஒளித்து நின்ற பூசதேவன் கைமுனுவோடு நேருக்குநேர் போர்புரிந்துகொண்டிருந்த பாலுகனை மறைந்திருந்து அம்பெய்து கொன்றான்.

மகாவம்சம் (25: 84-91)

''எல்லாளனின் படைத்தலைவன் தீகஜந்துவின் மருமகனான பாலுகன்'' என்று வரவேண்டிய இடத்திலே எல்லாளனுக்கு மருமகனான பாலுகன் எனப் பாடநூலிலே தவறுதலாக வந்துள்ளது.

## பௌத்தநெறியை முன்னிறுத்தியே துட்டகைமுனு சிங்கள மக்களைப் போராட்டத்துக்கு அணிதிரட்டினான்

பௌத்தமார்க்கத்துக்குப் பெருமை தேடத்தான் போரில் ஈடுபடுகிறேன் (ஆற்றின் மறுபக்கத்துக்குச் செல்கிறேன்) என்றும் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக அல்ல என்றும் கூறியே தன்படைக்கு ஆட்களைத் திரட்டினான். 500 இற்கு மேற்பட்ட பௌத்தபிக்குமாரையும் போர்க்களத்துக்குக் கூட்டிவந்தான்.

மகாவம்சம் (25: 2-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னுடைய ஆதிக்கத்தை அதிகரித்துக் கொள்வதற்காக நான் இந்தச் சிரமத்தை மேற்கொள்ளவில்லை. சம்புத்தருடைய மார்க்கத்தைப் பரப்பவே எப்போதும் பாடுபடுவேன் என்று துட்டகைமுனு பௌத்தநெறியை முன்னிறுத்திப் பேசியே படைகளைத் திரட்டினான். மகாவம்சம் (25:17)

பல நூறாயிரம் பேர் தன்னாற் கொல்லப்பட்டதையிட்டு துட்டகைமுனு துயருற 'இந்தக் கொலைகளின் (இந்தச் செய்கையின்) பொருட்டு நீ சுவர்க்கத்துக்குப் போகும் வழியில் எவ்வகைத் தடையும் ஏற்படாது. ஒன்றரை மனிதர்கள் மட்டுமே இங்கு உன்னாற் கொல்லப்பட்டார்கள். ஒருவர் மும்மணிகளைச் சரணடைந்துவிட்டார்; மற்றொருவர் பஞ்சசீலங்களை மேற்கொண்டுவிட்டார்; ஏனையவர்கள் எல்லாம் எமது மார்க்கத்தை நம்பாதவர்கள். தீயவாழ்வைமேற்கொண்டவர்கள். மிருகங்களை விட உயர்வாக மதிக்கப்படக் கூடாதவர்கள் என்று புத்ததேரர்கள் துட்டகைமுனுவைத் தேற்றினர் என மகாவம்சம் கூறுகிறது. (மகாவம்சம் (25:109 -12)

பௌத்தநெறியை நம்பாதவர்கள் மனிதர்களே அல்லர். அவர்கள் விலங்குகளைவிடக் கீழானவர்கள் அவர்களைக் கொல்வது தவறல்ல எனும் பௌத்த வெறியோடுதான் அக்காலத்திலும் பௌத்ததேரர்கள் பிக்குகள் இருந்திருக்கிறார்கள். அத்தகைய உணர்வோடுதான் மகாவம்சமும் எழுதப்பட்டுள்ளது.

ஆ: பசு (வடசொல்)
ஊர்தி உருளி தேர்ச்சில்லு (வடசொல்)
இயல்: அத்தியாயம் (வடசொல்)

சேதியபர்வதம் என்பது தேவநம்பியதீசனாலே புத்தபிக்குமார் தங்குவததற்காகக் கட்டப்பட்ட பௌத்தவிகாரை. இது கட்டப்பட்டது குறித்து மகாவம்சத்திலே தனி இயல் (அத்தியாயம்) உள்ளது.

துட்டகைமுனுவின் தந்தையின் பெயர் வெவ்வேறு நூல்களில் வெவ்வேறு வகையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காகவண்ணதீசன்
காகவனதீசன்
கந்தீசன்

எமது நூலில் காகவனதீசன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 05

## இலங்கை தென்னிந்திய அரசியல் உறவு

- இலங்கையின் இடைக்கற்காலம் அல்லது (கி.மு. 2800 - கி.மு. 1000) குறுங்கற்காலம்.
- வரலாற்றுத் தொடக்க (உதய) காலம் (கி. மு. 1000 - கி. மு. 250)
- வரலாற்றுக்காலம் (கி.மு. 250 முதல்)

## பிராமிச் சான்றுகள் (சாசனங்கள்)

- பண்டைய எழுத்துக்களின் வரிவடிவங்களான கல்வெட்டுக்கள்
- பண்டைய எழுத்துக்களின் வரிவடிவங்களான-செப்பேடுகள்
  பொன்னேடுகள்
  மண்ணோடுகள்

என்பன பிராமிச்சான்றுகள் (சாசனங்கள்) என அழைக்கப்படுகின்றன. பண்டைய தமிழர் எழுத்துக்களைக்கொண்ட கல்வெட்டுக்கள் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் என அழைக்கப்படுகின்றன.

## இலங்கையின் தொல்லியற் சான்றுகள், பிராமிச் சான்றுகள்

அநுராதபுரத்திலும் கந்தரோடையிலும் 60ஆம் ஆண்டுகளின் இறுதியில் அகழ்வாய்வுகள் நடத்தப்பட்டபோது கி.மு. 1000ஆண்டுகளுக்கு முன் மக்கள் வாழ்ந்ததற்கான ஒரே வகையான தடயங்கள் இவ்விரு இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டன

கி. மு. 4ஆம் நூற்றாண்டுக்கு முன் தென்னிந்தியாவிற் பயன்படுத்தப்பட்டது போன்ற கறுப்பு, சிவப்பு மட்கல ஓடுகள் பல மாந்தை கந்தரோடை, பூநகரிப் பகுதிகளிலே கண்டுபிடிக்கப்பட்டன. பூநகரியிற் பிராமி வடிவத்துடன் கூடிய மட்கல ஓட்டுத் துண்டுகளும் பல்வேறு காலத்தைச் சேர்ந்த காசுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமன்கிராய் மண்ணித்தலையிலும் 'ஈழ' என்ற பொருள்படும் எழுத்துக்களுடன் கூடிய மட்கல ஓட்டுத்துண்டுகளும், கோவிற் புளியங்குளத்தில் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டும் கண்டுபிடிக்கப் பட்டன.

ஆதித்த நல்லூரில் கண்டெடுக்கப்பட்டது போன்ற கி. மு. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட மனித எலும்புக்கூடுகள் பொம் பரிப்பிலும் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு இருபகுதியிலும் ஏராளமான எலும்புக்கூடுகள், ஈமத்தாழிகள் கண்டுபிடிக்கப்பட் டதனால் இவ்விருபகுதிகளும் தாழிக்காடுகள் என அழைக்கப் படுகின்றன.

கி. மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பிராமிச்சான்று கள் வவுனியா, கந்தரோடை, பெரியபுளியங்குளம், நாச்சியார் மலை, அம்பாறை, பூநகரிப் பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட் டன. வவுனியாமாவட்டம் பெரியபுளியங்குளம் பகுதியில் கண் டெடுக்கப்பட்ட 35 பிராமிக் கல்வெட்டுக்களில் 4 கல்வெட்டுகள் அப்பகுதியில் நிலவிய சிற்றரசுகள் பற்றியவை. பெரியபுளியங் குளம் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளில் இருந்த வேள், உதி, பருமக என்ற பெயர்களைக் கொண்டு அப்பகுதியில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டளவில் தமிழ்ச் சிற்றரசுகள் நிலவியமையை அறிந்துகொள்ளமுடிகிறது.

ஆதித்த நல்லூர் பொம்பரிப்பு போன்றே மாந்தையிலும் ஆனைக்கோட்டையிலும் கி. மு. 500 இற்கும் முற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனைக்கோட்டையிற் கண்டெடுக்கப்பட்ட மட்கல ஓட்டுத்துண்டுகளிலுள்ள சித்திர எழுத்துக்கள் சிந்துவெளியிற் காணப்பட்ட சித்திர எழுத்துக் களைப் போன்றே அமைவதால் ஆனைக்கோட்டைப் பகுதியிற் சிந்துவெளி நாகரிக காலத்தையொட்டிய மக்கள் வாழ்ந்துள்ள னர் அல்லது அந்த எழுத்துக்களை அறிந்த மக்கள் வாழ்ந்தனர் என்று அறியமுடிகிறது. குருநாகல் மாவட்டம் அரகமவிற் கிடைத்த தமிழ் மன்னன் பரிந்தனின் (கி. பி. 441 - 444) கல் வெட்டிலிருந்தும் கதிர்காமத்திற் கண்டெடுக்கப்பட்ட தமிழ் மன்னன் தாடிகனது (கி. பி. 460 - 463) கல்வெட்டிலிருந்தும் தெற்கில் உருகுணைவரை தமிழராட்சி நிலவியது பற்றி அறிந்துகொள்ளமுடிகிறது.

குருநாகல் மாவட்டம் கோட்டகமவிற் கண்டெடுக்கப்பட்ட 14ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டு யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் படை மலைநாட்டுக்குச் சென்று அங்கிருந்த சிங்கள அரசன் ஒருவனைத் தோற்கடித்ததாகக் கூறுகிறது.

## பௌத்தநெறி வெளிப்பாடுகளும் சிங்களமும்

இலங்கையிற் பௌத்தநெறிக்குரிய பண்பாட்டுக்கான தடயங்கள் எங்கு கண்டாலும் அவ்விடம் சிங்களவர் வாழ்ந்த இடம் எனச் சிங்கள ஆட்சியாளர்கள் பறைசாற்றிவருகின்றனர்.

பௌத்தநெறி தென்னிந்தியாவில் இருந்த தமிழ்மக்களிடம் பரவியதுபோன்று வட இலங்கையில் இருந்த தமிழ்மக்களிடமும் பரவியது. தென்னிந்தியாவில் புத்தவிகாரைகள் அமைக்கப்பட்டதுபோன்று வட இலங்கையில், தமிழர் பகுதிகளிற் பல விகாரைகள் அமைக்கப்பட்டிருந்தன. தமிழர் பகுதி விகாரைகள், தமிழகத்தின் விகாரைகள் போன்று தென்னிந்தியக் கலைமரபின் கட்டட அமைப்புகளில் கட்டப்பட்டிருந்தன. புத்தரது உருவங்களும் தென்னிந்தியாவிலிருந்ததைப் போன்றே அமைக்கப்பட்டன. தென்னிலங்கையில் உள்ள விகாரைகள் வட இந்தியக் கட்டட அமைப்பிலானதாக இருக்கின்றன. புத்தர் உருவங்களும் அவ்வாறே உள்ளன. கந்தரோடையிற் கண்டுபிடிக்கப்பட்ட சந்திரவட்டக்கல், தூபிகள் மற்றும் பௌத்தம் தொடர்பான பொருட்கள் எல்லாம் ஆந்திரக் கலை மரபைச் சேர்ந்தவை, தமிழகத்தின் நாகபட்டினம் காஞ்சி போன்ற பகுதிகளில் உள்ள பௌத்த கோயில்களின் வடிவங்களை ஒத்திருந்தன.

எனவேதான் சிங்கள பௌத்தத்தோடு தொடர்பில்லாத தமிழக பௌத்த தொடர்புகள் பற்றியதான தொல்லியற் பொருட்கள் கந்தரோடை அகழ்வாய்வின்போது வெளிவரத் தொடங்கியதும் கந்தரோடை அகழ்வாய்வு தொடராமல் நிறுத்தப்பட்டதுடன் நடத்தப்பட்ட அகழ்வாய்வு அறிக்கைகளும் சிங்கள அரசால் வெளிப்படுத்தப்படவில்லை.

எனவே பௌத்தம் தொடர்பான தொல்லியற் சான்றுகள் புத்தர் உருக்கள் இருக்குமிடங்கள் எல்லாம் சிங்களவர்கள் வாழ்ந்த இடங்களாக அவர்களோடு தொடர்புடைய இடங்களாக இருக்கவேண்டியதில்லை என்பதையும் பண்டைக்காலத்திலே தமிழரும் பௌத்தநெறியைக் கடைப்பிடித்து ஒழுகினர் என்பதையும் தமிழ்ப்பகுதியிற் பௌத்தம் தழைத்தோங்கியிருந்தது என்பதையும் மாணவர்களுக்கு எடுத்து விளக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு - 7

## இயல்: 01

### தமிழீழ மண் தொகுதிகளும் அவற்றின் பயன்பாடுகளும்

**குறிக்கோள்கள்**

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் நன்கு அறிந்துகொள்வர்

1) தமிழீழ மண்ணின் பரம்பல் பற்றி அறிந்தவராவர்.
2) தமிழீழ மண்ணின் பரம்பலைப் புறவுருவப்படத்திற் குறித்துப் பெயரிடக்கூடியவராவர்.
3) தமிழீழ மண் வகைகளைத் திரட்டிப் பெயரிடக்கூடியவராவர்.
4) மண்ணின் தன்மைக்கேற்ப, (பாது) காப்பு நடவடிக்கைகளை அறிந்துகொள்வர்.
5) தமிழீழத்திலே கைத்தொழிற் கனியவளங்களை அறிந்து படத்திற் குறித்துக் கொள்ளக்கூடியவராவர்.

## இயல்: 02

### தமிழீழ நீர்வளமும் அதன் பயன்பாடுகளும்

**குறிக்கோள்கள்:**

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் அறிந்துகொள்வர்

1) தமிழீழ நீர்வளம் பற்றி அறிந்தவராவர்.
2) நீர்த்தட்டுப்பாடு ஏற்படுவதால் ஏற்படும் தீமைகளை அறிந்து வெளிப்படுத்தக்கூடியவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) நீர், (பாது) காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியவராவர்.

4) நீர்வாழ் தாவரங்களையும் விலங்குகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் அறிந்து வெளிப்படுத்தக்கூடியவராவர்.

5) தமிழீழப் பகுதியிலுள்ள ஆறுகளையும், குளங்களையும் படத்திற் குறித்துக் காட்டக்கூடியவராவர்;

# இயல்: 03

## தமிழராட்சியும் மாட்சியும் - 1

## (கி. பி. 7ஆம் நூற்றாண்டு வரை)

### குறிக்கோள்கள்:

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் தெரிந்துகொள்வர்

1) பண்டைய இலங்கையில் தமிழர் ஆட்சி நிலவியதை மகாவம்சமும் எடுத்துக் கூறுகிறது.

2) இலங்கைக்கு விசயன் வருவதற்கு முன்னரே தமிழர் தொன்மைக் குடிகளாக இருந்தமையை அறிவர்.

3) மகாவம்சம் தேரவாத பௌத்தத்தை முதன்மைப்படுத்துவதையும் அதிற்பல வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன என்பதையும் தெரிந்துகொள்வர்.

4) கி. மு. 3ஆம் நூற்றாண்டில் வடபகுதியான நாகதீபத்திலும் திசமகாராமவில் (மகாகம) இருந்து அனுராதபுரத்துக்குத் தெற்கேயும் தமிழ் அரசுகள் இருந்தமையை அறிந்து கொள்வர்.

5) கி. பி 1-7 நூற்றாண்டுகளுக்கிடையில் சிங்கள மன்னர்கள் பலர் தமிழ் மன்னர்களினதும் தமிழ்மக்களினதும் துணையோடுதான் ஆட்சி புரிந்தனர் என்பதையும் அந்தளவுக்கு இலங்கையில் தமிழர் செல்வாக்குப் பெருகியிருந்ததையும் விளங்கிக்கொள்வர்

6) கி. மு. 1ஆம் நூற்றாண்டுவரை ஆட்சிபுரிந்த தமிழ் சிங்கள மன்னர்களது பெயர்களைத் தெரிந்துவைத்திருப்பர்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) போரிடும் ஆற்றல் மிகச் சிறந்த அளவிலே தமிழருக்கு இருந்தது என்பதைத் தெரிந்துகொள்வர்.

8) சிங்கள மன்னர்கள் பலர் உள்நாட்டுக் குழப்பங்களினால் உயிர்தப்பவும் படையுதவிகளைப் பெறவும் தென்னிந்தியாவுக்குத் தப்பியோடியதை அறிவர்.

9) தமிழ் மன்னர்கள் பலர் பரந்தநோக்கோடு பௌத்தநெறியைப் புரந்து அதன் வளர்ச்சிக்கும் பங்காற்றியிருக்கிறார்கள்.

# இயல்: 04

## தமிழர் ஆட்சியும் மாட்சியும் - 2

**(கி. பி. 8 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 12 ஆம் நூற்றாண்டுவரை)**

### குறிக்கோள்கள்:

**பின்வருவனவற்றை எமது மாணவர்கள் நன்கு அறிந்துகொள்வர்**

01) தென்னிந்தியாவிற் காணப்பட்ட பேரரசுகளையும் அவற்றுக்கு இடையிலான போர்களையும் அவற்றினால் இலங்கைக்கேற்பட்ட தாக்கங்களையும் அறிந்துகொள்வர்.

02) சோழருடைய படையெடுப்புகளுக்கு வித்திட்ட சிங்கள மன்னர்கள் பற்றி விளங்கிக்கொள்வர்.

03) சோழர் தமது ஆட்சி மையத்தைப் பொலநறுவவில் நிறுவி 'ஜனநாத' மங்கலம் எனப் பெயரிட்டதை அறிவர்.

04) இலங்கை தொடர்ச்சியாக ஏழு சோழ மன்னர்களால் 82 ஆண்டுகள் ஆளப்பட்டதை அறிந்துகொள்வர்.

05) பௌத்தநெறி அடையாளங்களை (சின்னங்களை)த் தமிழர்கள் பேணிக்காத்து வந்துள்ளனர் என்பதனைத் தெரிந்துகொள்வர்.

06) 1ஆம் விஜயபாகு மன்னன் படைகளில் இருந்த தமிழர்களின் கிளர்ச்சியால் அவன் உருகுணைக்குத் தப்பியோடச் செய்யுமளவுக்கு அனுராதபுரச் சூழலில் தமிழர்கள் வலுவுள்ளவராக இருந்தனர் என்பதை அறிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) 1ஆம் பராக்கிரமபாகுவின் வெற்றிக்குத் தமிழர்களின் பங்களிப்பு முதன்மையானதாக இருந்ததை அறிவர்.

08) சிங்களவர்களாற் பெருந்தலைவனாகவும் வீரனாகவும் போற்றப்படும் 1ஆம் பராக்கிரமபாகுவின் தமிழ் மரபுக் கலப்புப் பற்றி விளங்கிக்கொள்வர்.

09) 1ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தின் பின் சிங்கள ஆட்சி வலுவற்றதாக நிலையற்றதாக இருந்ததை நன்கறிவர்.

10) 12ஆம் நூற்றாண்டின்பின் இலங்கைத் தீவின் வடபகுதியிலே தமிழராட்சி வலுப்பெற்றது பற்றியும் சிங்கள ஆட்சி நலிவடைந்து தெற்கு, தென்மேற்கு நோக்கி நகர்ந்தது பற்றியும் அறிந்துகொள்வர்.

# இயல்: 05

## யாழ்ப்பாணத் தமிழரசு

### குறிக்கோள்கள்:

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் நன்கறிந்துகொள்வர்

01) ஐரோப்பியர் வருகையின்போது இலங்கைத் தீவில் இருந்த 3 அரசுகளில் யாழ்ப்பாணத் தமிழரசு காலத்தால் முந்தியதும் வலுவுள்ளதுமான அரசாகத் திகழ்ந்ததை அறிந்துகொள்வர்.

02) 13ஆம் 14ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத் தமிழரசுக்கு ஏனைய சிங்கள அரசுகள் அடிபணிந்திருந்தமையையும் திறைசெலுத்தி வந்தமையையும் நன்கறிவர்.

03) யாழ்ப்பாண அரசின் பொருண்மிய நடவடிக்கைகளை விளங்கிக்கொள்வர்.

04) யாழ்ப்பாணத் தமிழரசு தமிழகத்துடன் கொண்டிருந்த தொடர்புகள் பற்றி அறிந்துகொள்வர்,

05) தமிழகத்தின் சேர சோழ பாண்டிய அரசுகள் காலத்துக்குக் காலம் எழுச்சியும் வீழ்ச்சியும் பெற்றுவந்ததைப் போன்று யாழ்ப்பாணத் தமிழரசுக்கு முன்பிருந்த வட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழரசும் காலத்துக்குக் காலம் எழுச்சியும் வீழ்ச்சியும் உற்றுவந்ததை அறிந்துகொள்வர்.

06) ஈழத்தில் நிலவிய தமிழ் அரசுகள் எவ்வெப் பெயர்களுடன் விளங்கின என்பதனை அறிந்துகொள்வர்.

07) யாழ்ப்பாண அரசின் புகழ்பூத்த மன்னர்களின் பெயர் களைக் கூறக்கூடியவராவர்.

08) கந்தரோடை (கதிரமலை) பூநகரி என்பன பண்டைய தமிழர்களின் ஆட்சி மையங்களாக இருந்ததுபற்றி அறிந்து கொள்வர்.

09) கந்தரோடை, பூநகரி அகழ்வாய்வுகளின்போது கண்டெடுக் கப்பட்ட தொல்லியற் சான்றுகளைப் பற்றித் தெரிந்து கொள்வர்.

10) யாழ்ப்பாணத் தமிழரசின் கீழ் இருந்த பகுதிகளைப் பற்றித் தெரிந்துகொள்வர்.

11) தமிழரின் ஆளுமை இலங்கைத்தீவு முழுவதும் பரந்திருந் தமையை அறிந்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக்கல்வியும் வரலாறும்

## ஆண்டு 7 - ஆசிரிய வழிகாட்டி

## இயல்: 01

## தமிழீழ மண் தொகுதிகளும் அவற்றின் பயன்பாடுகளும்

1) மண்பரம்பல் தொடர்பாகத் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட மாணவர்களை ஒழுங்கு செய்தல்.
2) தெரிந்தெடுக்கப்பட்ட மண்வகைகளை மாணவர்கள் திரட்ட வழிகாட்டடல்.
3) திரட்டப்பட்ட மண்களைக் காட்சிப்படுத்த, பெயரிட வழி காட்டுதல்.
4) மண் அரிமானத்தைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிட ஒழுங்கு செய்தல்.
5) மண் வீணாகுதல் வளங்குன்றிப் போதல் தொடர்பான இடங்களை நேரடியாகச் சென்று பார்க்க உதவுதல்.
6) மண்வளத்தைப் பயன்படுத்தி உண்டாக்கப்படும் பொருட்களையும் உண்டாக்கும் நிறுவனங்களையும் பார்வையிட ஒழுங்குசெய்தல்.
7) களச்செலவுகள் (பயணங்கள்) ஊடாகப் பெற்ற பட்டறிவுகளை (அனுபவங்களை) அட்டவணைப்படுத்த, அறிக்கைப்படுத்த, கட்டுரையாக்க ஒழுங்குசெய்தல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்: 02

## தமிழீழ நீர்வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

1) நீர்தேக்கப்படும் இடங்களைப் பார்வையிடல்,
2) நீரில் வாழும் தாவர,விலங்கு உயிரினங்களைச் சென்று பார்வையிட வழிகாட்டடல்.
3) சதுப்பு நில நீர், உவர் நீர்,நன்னீர் வளங்களையும் அதனோடு தொடர்பான இடங்களையும் சென்று பார்வையிடல்
4) நீர்வளங்கள் உச்சமாகப் பயன்படுத்தப்படும் இடங்களைச் சென்று பார்வையிடல்.
5) நீர் வீணாக்கப்படும் தூய்மைக்கேடடையும் (மாசடையும்) இடங்களைச் சென்று பார்வையிட வழிகாட்டடல்.
6) நீரிலிருந்து பெறப்படும் முதன்மையான உப்பு உண்டாக்குதல் (உற்பத்தி) போன்ற இடங்களைப் பார்வையிட வழி செய்தல்.

# இயல்: 03

## தமிழர் ஆட்சியும் மாட்சியும் - 1

எமது மூதாதையரான பண்டைத் தமிழர் தமது வரலாற்றைப் பதிந்து வைக்கும் வழக்கம் அற்றவர்களாக இருந்ததால் எமது மூதாதையரின் வாழ்க்கைமுறை, ஆட்சிமுறை அவர்களின் பெருமைகளை நாம் அறியமுடியாதிருந்தது.

பெளத்தநெறியை வளர்க்கும் நோக்குடனும் உலகெங்கும் பரப்பும் நோக்குடனும் செயற்பட்ட பெளத்த தேரரால் எழுதப்பட்ட மகாவம்சத்தில் பண்டைய இலங்கையின் சில வரலாற்றுக் குறிப்புக்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தநெறி சார்ந்த அதிலும் குறிப்பாகத் தேரவாத பௌத்தநெறி சார்ந்த அரசியல் வரலாறுதான் மகாவம்சத்திற் கூறப்படுகிறது. ஆயினும் தேரவாத பௌத்த மன்னர்களின் காலத்துக்கு முன்பின்னாக இருந்தவர்கள் பற்றியும் தேரவாத பௌத்த மன்னர்களோடு போரிலீடுபட்டவர்கள் பற்றியும் வரும் சில குறிப்புக்களிலிருந்து இலங்கையை ஆண்ட சில தமிழ்மன் னர்கள் பற்றியும் அவர்கள் ஆட்சிக் காலங்கள் பற்றியும் ஓரளவு அறியக்கூடியதாக இருக்கின்றது.

மகாவம்சத்தின் தொடக்கப்பகுதி முழுமையான கட்டுக் கதையாகும். பிற்பகுதியில் மிகைப்படுத்தப்பட்ட தேரவாத பௌத்த மன்னர்கள் வரலாற்றுடன் அவர்களோடு தொடர் புடைய தமிழ் மன்னர்கள் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புக் கள் காணப்படுகின்றன.

★ மகாவம்சக் கூற்றுப்படியே விசயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இலங்கையிலே தமிழினத்தின் ஒரு மரபினரான இயக்கர், நாகர்கள் இருந்திருக்கிறார்கள். ஆட்சிநடத்தி இருக்கிறார்கள்.

★ விசயனின் தோழர்களது குடியேற்றங்கள் முதன்முதலில் அமைந்ததாக மகாவம்சம் குறிப்பிடும் இடங்களிலே நடத் தப்பட்ட அகழ்வாய்வுகளிலே பெருங்கற்பண்பாட்டுக்குரிய மக்கள் வாழ்ந்ததற்குரிய சான்றுகளே கிடைத்திருக்கின்றன. இவை மகாவம்சத்தின் விசயன் குடியேற்றத்தைப் பொய் யாக்குகின்றன.

★ தென்னிந்தியாவிலே, குறிப்பாகத் தமிழகத்தின் பெருங்கற் பண்பாட்டுக்குரிய மக்களாகத் தமிழ் மக்கள் திகழ்ந்திருக் கின்றனர். அவர்களோடு வாழ்ந்த மக்கள் அக்காலத்திற் பயன்படுத்தியதுபோன்ற பொருட்களே இலங்கையின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளின்போது கிடைத்துள்ளன. இதனாற் பெருங்கற் பண்பாட்டுக்காலத் தில் இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்துவந்தது உறுதியாகின் றது.

★ விசயனின் குழுவினர்தான் இலங்கைக்கு இரும்பின் பயன் பாட்டை அறிமுகப்படுத்தினர் என்பது தவறானது. ஏனெ னில், இலங்கைக்கு அருகிலே ஆதித்த நல்லூரின் அகழ்வாய் வுகள் விசயன் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழகத்திலிருந்த மக்கள் இரும்பின் பயன்பாட்டைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்களாக இருந்தனர் என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

★ தொல்பொருளறிஞர் அலெக்சாண்டர் இரியா என்பவர் மட்டும் 391 இரும்பாலான கருவிகளை அங்கு அகழ்வாய்வின்போது எடுத்துள்ளார். அவற்றில் 32 வகையான போர்க் கருவிகளும் அடங்கும். மகாவம்சம் தேரவாத பௌத்தத்தை முதன்மைப்படுத்தியதுடன் மகாயான பௌத்தத்தைக் கடைப்பிடித்த சிங்கள மன்னர்களின் பெருமைகளைக் கூட இருட்டடிப்புச் செய்துள்ளது. அவர்களைத்திட்டித் தூற்றித் தீர்த்திருக்கிறது.

எடுத்துக்காட்டு - 1ஆம் கஜபாகு. இவனது பெருமைக்குரிய செயற்பாடுகளை மகாவம்சம் முற்றாக இருட்டடிப்புச் செய்துள்ளது. 'பூஜாவலியே' 1ஆம் கஜபாகுவின் பெருமைகளை வெளிக்கொண்டுவந்தது. மகாஜான பௌத்தனான மகாசேனனை மகாவம்சம் திட்டித்தீர்த்திருக்கிறது.

துட்டகைமுனு எல்லாளனுடனான போரின்போது அவன் போர்ப்படை புறப்பட்ட மகாகம (திசமகாராம) விலிருந்து அனுராதபுரம் வருவதற்கிடையில் 31 தமிழ்ச் சிற்றரசர்களோடு கடும் போரிலீடுபட்டான் என்று மகாவம்சம் கூறுவதிலிருந்து அனுராதபுரத்துக்குத் தெற்கே 31 தமிழ் அரசுக்கள் கி. மு.3ஆம் நூற்றாண்டளவில் இருந்ததை அது வெளிப்படுத்தியுள்ளது.

கி. பி. 3ஆம் நூற்றாண்டில் அனுராதபுர நகர்ப்பகுதிகளிலே தமிழ் மக்கள் செறிவாக வாழ்ந்து வந்தனர். கி. பி. 287 இல் அபயநாகன் என்பவன் நகரிலிருந்த தமிழர்களை அணி திரட்டி அவர்களின் உதவியுடன் தன் அண்ணனான தீசமன்னனை விரட்டிவிட்டு அனுராதபுர ஆட்சியைத் தான் கைப்பற்றினான்.

தமிழகத்திலிருந்து படையுதவி பெற்றுவருபவர்களும் ஈழத்தில் இருந்த தமிழர்களின் உதவிகளைப் பெறுபவர்களும் மட்டுந்தான் இலங்கையில் அனுராதபுரத்தில் ஆட்சியில் அமரமுடியும்; ஆட்சியைக் காப்பாற்ற முடியும் என்ற நிலை கி. பி. 7ஆம் நூற்றாண்டு முழுவதும் நிலவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியைப் பறிகொடுத்தவர்கள் ஆட்சியை மீட்பதற்கும்; இருக்கும் ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்வதற்கும் எனச் சிங்கள அரசர்களும் அரச குடும்பத்தினரும் அடிக்கடி தமிழகத்தின் உதவியை நாடிச் சென்றனர். சில சிங்கள அரசர்கள் தமது உயிருக்குத் தீங்கு ஏற்பட்ட காலங்களில் தமது உயிரைக் காத்துக் கொள்வதற்காகத் தமிழகத்துக்குப் புகலிடம் நாடியும் சென்றனர்.

பூஜாவலி – புத்தர் பரிநிர்வாணமெய்துவதற்கு முன்னரும் பின்னரும் அவருக்கு வழங்கப்பட்ட காணிக்கைகள், புத்தநெறியின் தொடக்ககாலவரலாறு, இந்தியாவில் அதன் வளர்ச்சி, இலங்கை மன்னர்கள் புத்த விகாரைகளுக்கும் பிக்குகளுக்கும் வழங்கிய நன்கொடைகள் போன்றவை இதில் எழுதப்பட்டுள்ளன. இதை கி. பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மயூரபாத மகாதேரர் என்பவர் எழுதியுள்ளார்.

## மோரிய மரபு

மோரிய மரபு பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. போதிமரக்கிளையுடன் வடஇந்தியாவிலிருந்து வந்த சாக்கிய குலத்தின் வழி வந்தவர்களாக, பிற்காலக் கருத்து நிலவுகிறது. இலம்பகர்ண மரபினருக்கு முதலிருந்த சிங்கள அரசமரபினர் என்பர்.

## கூலிப்படை

சிங்கள அரசர்கள் காலத்துக்குக் காலம் தமது ஆட்சியை இழந்த நிலையிலோ ஆட்சிக்குப் பேரிடர்வந்த நேரங்களிலோ தமிழகம் சென்று மன்னர்களிடம் படையுதவி பெற்றுவந்தே தமது ஆட்சியை மீட்டெடுத்தனர்; நிலைநிறுத்திக்கொண்டனர். இவ்வாறு இவர்களின் உதவிக்கு வந்த தமிழர்களைக் கூலிப் படைகள் என்ற பெயரிலேயே பௌத்த சிங்கள நூல்கள் அழைக்கின்றன.

ஆனால் பிற்காலத்தில் யாழ்ப்பாண அரசை அழித்தொழிக்க வந்த போர்த்துக்கேயப் படைகளுக்குக் கூலிப்படைகளாகச் சிங்களப்படைகள் உதவியது பற்றி இருட்டடிப்புச் செய்துள்ளன. 1619இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வந்த போர்த்துக்கேயரின் படையில் போர்த்துக்கேயப்படையை விட மூன்று மடங்கு கூடுதலான படையாக 6ஆயிரம் சிங்களக் கூலிப்படைகள் பங்கேற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல்: 04

# தமிழர் ஆட்சியும் மாட்சியும் - 2

## (கி. பி. 8-12ஆம் நூற்றாண்டு வரை)

தென்னிந்தியாவின் தமிழகம் நீண்டகாலமாக சேர, சோழ பாண்டியர்களான முடியுடைய மூவேந்தர் மரபினாற் சிறப்புற ஆட்சி செய்யப்பட்டு வந்தது. இந்த 3 அரசுகளும் காலத்துக்குக் காலம் உலகப் புகழ்பெற்ற பேரரசுகளாகத் திகழ்ந்தன. இந்த மூன்று அரசுகளும் வெவ்வேறு காலங்களில் வட இந்தியாவின் இமயம் வரை படை நடத்தி வெற்றிக்கொடி நாட்டின.

இந்த அரசுகள் படை நடத்தி இமயம் வரை வெற்றி பெற்றபோதிலும் வெற்றிபெற்ற பகுதிகளைக் கைப்பற்றி ஆளவில்லை அந்த நோக்கமும் அவர்களுக்கு இருக்கவில்லை. பெரும்பாலும் தமது பெருமைக்காகவும் தம்மை இகழ்ந்தவர்களுக்குப் பாடம் புகட்டுவதற்காகவுமே தமிழ் மன்னர்களின் வடக்கு நோக்கிய படையெடுப்புக்கள் நடைபெற்றன. தமிழக மண் எவரும் கவர முடியாத எஃகுக் கோட்டையாகத் திகழ்ந்தது. ஆயினும் இந்த மூன்று அரசுகளும் தத்தமக்குள்ளே பெரும் போர்களில் ஈடுபட்டதால் தத்தமது நாட்டு எல்லைகளை வலுவுக்கேற்பக் காலத்துக்குக் காலம் மாற்றிக்கொண்டன. தமிழ் மன்னர்களுக்குள் நடைபெற்ற போர்களில் வெண்ணிப்போர், தலையாலங்கானத்துப்போர், வஞ்சிப்போர், தகடூர்ப்போர் போன்றன பெரும் போர்களாகச் சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் கி. பி. 3ஆம் நூற்றாண்டிலிருந்து 6ஆம் நூற்றாண்டு வரையிலான 3 நூற்றாண்டுகாலம் தமிழகத்தின் இருண்ட காலமாக, களப்பிரர் என்பவர்கள் தமிழகத்தை வெற்றிகொண்டு ஆட்சி நடத்திய காலமாக இருந்தது.

அதன்பின் தமிழகத்தின் வடகிழக்குப் பகுதியிற் புதிதாகத் தோன்றிய பல்லவ அரசும் வளர்ச்சிபெற்று மீண்டும் எழுச்சி பெற்ற சேர சோழ பாண்டிய அரசுகளுடன் போட்டியிட்டு முன்னணியிற்றிகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிங்களவனான மானா என்ப பவன் படை உதவி பெறும் நோக்கோடு தமிழகம் சென்று பல்லவனது போர்களிற் பங்குகொண்டு பல்லவ மன்னனது அன் பைப்பெற்று, ஈற்றிலே பல்லவர் படைத்துணையும் பெற்று கி.பி. 691இல் அனுராதபுரத்துச் குத் திரும்பி வந்து அக்கிர போதியைத் தோற்கடித்து 27 ஆண்டுகள் அரசாட்சி நடத்தினான்.

காலப்போக்கில் சிங்கள மன்னர்கள் கடைப்பிடிந்த வெளி நாட்டுக் கொள்கைகளினால் அடிக்கடி பாண்டிய சோழ அரசு கள் அனுராதபுரத்தின் மீது படையெடுத்து அவர்களைத் தோற் கடித்துக் கீழ்ப்படிய வைத்துத் திறை பெற்று மீட்டனர்.

தமிழகத்தின் அரசியலிற் சிங்கள மன்னர்கள் அடிக்கடி தலையிட்டதனால், சோழப்பேரரசு 10 ஆம் நூற்றாண்டின் இறு தியில் இலங்கையைக் கைப்பற்றி 82 ஆண்டுகளுக்கு மேல் தனது ஆட்சியின் கீழ் இணைத்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டது.

## மும்முடிச் சோழ மண்டலம்

இலங்கையிற் சோழர் வெற்றிகொண்டு ஆட்சி செய்த பகுதி மும்முடிச் சோழ மண்டலமாகும். சேர பாண்டிய சிங்கள அர சுகளை ஒரே நேரத்தில் வெற்றி பெற்றதாற் சோழ மன்னன் 1ஆம் இராசராசனுக்கு மும்முடிச்சோழன் என்றும் பட்டம் கிடைத்தது. அவனது ஆட்சிப்பகுதி என்பதால் இலங்கையில் அவனாற் கைப்பற்றப்பட்டு ஆட்சி நடத்தப்பட்ட பகுதிக்கு மும் முடிச்சோழ மண்டலம் எனப் பெயர் சூட்டினான்.

## சோழ மண்டலம்

கி. பி. 1001இல் தனது நிலையான ஆட்சிப்பகுதியை அளந்து நிலவுரிமை நிலத்தின் தன்மை என்பவற்றை வரையறை செய்த 1ஆம் இராசராசன் கி. பி 1002 இல் சோழப் பேரரசைப் பல மண்டலங்களாகப் பிரித்தான். அவற்றிற் பல அவனது விருதுப் பெயர்களைத் தாங்கி நின்றன. நிகரிலிச்சோழ மண்டலம் (மைசூர் லாரிப் பகுதிகள்) இராசராச மண்டலம் (பாண்டி நாடு) மும்முடிச்சோழ மண்டலம் (இலங்கை)

## சோழர் ஆட்சியில் நிலப்பிரிவுகள்

● மண்டலம் - மாநிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● வளநாடு - மாவட்டம்

● நாடு - வட்டம் பேரூர் என அழைக்கப்பட்டன.

## 'ஜனநாத' மங்கலம்

மங்கலம் என்பது சோழர்களாற் குடியிருப்புக்களுக்கும் நகரங்களுக்கும் வழங்கப்பட்ட பெயர்களாகும். பார்ப்பனக்குடியிருப்புக்கள் சதுர்வேதி மங்சலம் என அழைக்கப்பட்டன. அவ்வாறு இலங்கையைக் கைப்பற்றிய சோழர் பொலநறுவையில் தலைநகரையமைத்து 'ஜனநாத' மங்கலம் எனப் பெயர் சூட்டினர். கந்தளாய்ப்பகுதியிற் புதிதாகக் கட்டப்பட்ட இராசராசேஸ்வரம் கோயிற் பகுதியில் இராசராச சதுர்வேதிமங்கலம் அமைக்கப்பட்டது.

## பட்டப் பெயர்கள்

சோழ மன்னர்கள் இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டப் பெயர்களை மாறிமாறி ஆட்சிக்கு வரும்போது சூடிக்கொண்டனர். இது போன்றுதான் யாழ்ப்பாண அரசரும் பரராசய சேகரன் செகராசசேகரன் என ஆட்சிக்கு வந்ததும் பட்டப்பெயர்களை மாறிமாறிச் சூடிக்கொண்டனர்.

# இயல்: 05

# யாழ்ப்பாணத் தமிழரசு

இலங்கையின் வடபகுதி வரலாற்றுக்காலத்திலிருந்தே தமிழர் வாழ்ந்துவரும் பகுதியாக, தமிழராட்சி நிலவிவந்த பகுதியாக இருந்து வந்திருக்கிறது. தொடக்ககாலத்தில் நாகதீபமென அழைக்கப்பட்டது. நாகதீப அரசு நிலவியதை மகாவம்சம் மணிமேகலை போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன.

கந்தரோடைப் பகுதியிற் கிடைத்த தொல்லியல் ஆய்வுகளும் எமது பண்டைய வரலாற்று நூல்களும் இலக்கியங்களும் சுதிரமலை ஆட்சிமையம் பற்றி எடுத்துக் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1917இல் கந்தரோடையில் மேலாய்வு மேற்கொண்ட சேர் போல் ஈபீரிஸ் பல தொல்லியற் சான்றுகளை எடுத்து ஆய்வு செய்தார்; அவர் விசயன் வந்ததாகக் கூறப்படும் கி.மு. 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னிருந்தே மனித நடமாட்டம் மிகுந்த பகுதியாகக் கந்தரோடைப் பகுதி இருந்ததென்றும் அந்நிலை கிருத்துக்காலத்துக்குப் பின்னும் நிலைத்திருந்தது என்றும் எடுத்துக்கூறினார்.

கந்தரோடையில் விமலாபேக்லே அவர்கள் 1967இல் மேலாய்வையும் 1970இல் அகழ்வாய்வையும் மேற்கொண்டபோது பெருங் கற்பண்பாட்டுக் காலத்துக்குரிய இரும்பு வெண்கலக் கருவிகள், மணி வகைகள், உரோமக் காசுகள், உரோம மட்கலங்கள் மற்றும் ஏராளமான பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

இப்பகுதியிற் காணப்பட்ட பௌத்த தூபிகளின் (தகோபாக்களின்) கீழ் புத்தபிக்குமாரை அடக்கஞ்செய்த முருகைக் கற் பேழைகளும் இருந்தன. இங்கு காணப்பட்ட பௌத்த அடையாளங்கள் தென்னிந்திய ஆந்திரக் கலைமரபான நாகார்சுன கொண்டா அமராவதி கலை மரபுகளைக் கொண்டதாக இருந்தது.

13ஆம் 14ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாண அரசு இலங்கைத்தீவின் ஏனைய அரசுகளைவிட வலிமைமிக்க ஆளுமை கொண்ட அரசாகத் திகழ்ந்தது பற்றிச் சிங்கள நூல்களான ராஜாவலி, நிகாயசங்கிரஹ, குருநாகல விஸ்தர என்பன எடுத்துக் கூறுகின்றன. சிங்கள வரலாற்றுப் பேராசிரியரான கே. எம். டி. சில்வா, ஜீ. எஸ். மென்டிஸ் போன்றோரும் தமது வரலாற்று நூல்களில் யாழ்ப்பாண அரசின் வலிமையையும் சிங்கள அரசுகள் அதற்குத் திறை செலுத்தியதையும் எடுத்துக் கூறியுள்ளனர்.

யாழ்ப்பாண மன்னனுடைய படைகளும் செல்வங்களும் இலங்கையிலுள்ள ஏனைய அரசுகளை விஞ்சிவிட்டன. மலைநாட்டிலிருந்தும் தாழ்ந்த பகுதி மாவட்டங்களிலிருந்தும் 9துறைமுகங்களிலிருந்து அவன் திறை பெற்றான் என ராஜாவலி கூறுகிறது. கோட்டகம தமிழ்க்கல்வெட்டும் (சாசனமும்) மடவலச் சிங்களக் கல்வெட்டும் (சாசனமும்) இபன்பற்றுற்றாவின் வரலாற்றுக் குறிப்பும் இதனை உறுதிப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண அரசு முத்து சங்குகுளிப்பில் பெருஞ்செல்வம் திரட்டிவந்தது. அதுபோன்றே கடற்றொழிலும் சிறப்புற நடைபெற்றது. அதனுடன் சிங்களப் பகுதிகளின் ஏற்றுமதிப்பொருட்களான நறுமணப் பொருட்கள் போன்றவற்றை யாழ்ப்பாண அரசே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவந்ததாக இபன்பற்றூற்றா குறிப்பிட்டுள்ளார். 100இற்கும் மேற்பட்ட கப்பல்கள் யாழ்ப்பாண அரசின் வணிகப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பணியில் ஈடுபட்டதாகவும் இபன் பற்றூற்றா குறிப்பிட்டுள்ளார். இவைதவிர காடுகளிலிருந்து பிடிக்கப்படும் யானைகளையும் யாழ்ப்பாண மன்னனே வெளிநாடுகளுக்கு விற்றுவந்ததாகத் தமிழக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. உப்பு பெருமளவில் விளைந்து மலைபோலக் குவிக்கப்பட்டன. பருத்தி ஏராளமாக விளைவிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவற்றோடு சிங்களப்பகுதியிலிருந்து பெருமளவு திறையும் பெறப்பட்டன.

யாழ்ப்பாண அரசுக்கும்-தமிழகத்துக்கும் வணிகத் தொடர்புகளும் அரசியற்றொடர்புகளும் நெருக்கமாக இருந்தன. இறைநெறி, கலைபண்பாட்டுத் தொடர்புகளும் நெருக்கமாகவே இருந்தன, இவற்றினால் தமிழகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையேயான போக்குவரத்துக்கள் தங்குதடையின்றி நடைபெற்றன.

முற்கால அரசு, இடைக்கால அரசு, பிற்கால அரசு எனச் சேர சோழ பாண்டிய அரசுகள் காலத்துக்குக்காலம் ஏற்றமும் இறக்கமுமுற்றிருந்தன. பல்வேறு கரணியங்களினால் அவர்களின் தலைநகர்களும் வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டன. அதுபோன்றே இலங்கையில் இருந்த தமிழரசும் காலத்துக்குக் காலம் எழுச்சியும் வீழ்ச்சியும் அடைந்ததுடன் அதன் தலைநகரமும் அடிக்கடி மாற்றப்பட்டன. நாகதீபம், கதிரைமலை, சிங்கைநகர் யாழ்ப்பாணத்து நல்லூர் எனத் தலைநகரங்கள் மாற்றப்பட்டன.

## நாகதீபம்

நாகதீப அரசு கி. மு. 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே சிறந்த அரசாகத் திகழ்ந்ததை மகாவம்சம் குறிப்பிடுகிறது. கி. பி. 2ஆம் நூற்றாண்டிலும் நாகதீப அரசு சிறப்புறத் திகழ்ந்ததை தாலமியின் 2ஆம் நூற்றாண்டுத் தேசப்படம் எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகிறது. மணிமேகலை, சிலப்பதிகாரம் எனும் கி. பி. 2ஆம் நூற்றாண்டு இலக்கியங்கள் நாகநாடு என இதைக் குறிப்பிடுகின் றன. கி. பி. 2ஆம் நூற்றாண்டு வல்லிபுரப் பொன்னேட்டிலும் இது நாகதீப என அழைக்கப்படுகிறது. கி பி. 135 இல் ஆட்சி யிலிருந்த மகல்ல நாகன் நாகதீபத்தில் சாலிபர்வத விகாரத தைக் கட்டினான் என மகாவம்சம் கூறுகிறது. இவற்றிலிருந்து நாகதீப அரசு கி. மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 2ஆம் நூற்றாண்டுவரை இருந்தது உறுதியாகின்றது.

கதிரமலை, சிங்கைநகர் போன்ற இடங்களில் நிலவிய தமி ழராட்சிகள் பற்றி வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை போன்ற இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. கந்தரோடை (கதிரமலை) பூநகரி போன்ற இடங்களில் தொல்லியல் ஆய்வு கள், அகழ்வாய்வுகள் தமிழரின் ஆட்சி மையம் இருந்ததற்கான சான்றுகளைத் தருகின்றபோதிலும் மேலும் பல ஆழமான ஆய்வு களை மேற்கொண்டே கதிரமலை, சிங்கைநகர் அரசுகள் பற் றியும் அரசுகள் நிலவிய காலங்கள் பற்றியும் விரிவாகத் தெரிந்து கொள்ளமுடியும்.

பூநகரிப்பகுதித் தொல்லியல் ஆய்வின்போது தென்னியன் குளம் செழியாவில்மூங்குவில்எல்லைப்பகுதியில் 1 1/2 மைல்சுற்று வட்டத்தில் 5இற்கும் மேற்பட்ட கட்டடத்தொகுதிகளின் இடி பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பகுதியையொட்டி மேலும் 5 கட்டடத்தொகுதிகளின் இடிபாடுகள் இருக்கின்றன. இவை முற்கால அரண்மனைப் பகுதியாயிருக்கலாமென நம்பப்படு கிறது. ஆயினும் கூடுதலான ஆழமான ஆய்வின் பின்தான் உறுதிசெய்யப்படவேண்டும்.

இவைதவிர ஏராளமான மட்கலங்கள், பிராமி எழுத்துக் களுடனான உடைந்த மட்கலத்துண்டுகள், கிரேக்க உரோம அராபிய, சீன தமிழகக்காசுகள், ஏராளமான பண்டைக்காலக் கோயில்களின் இடிபாடுகள், கோயிற் பொருட்கள் சுட்டமண் உருவங்கள், தாழிகள் மற்றும் ஏராளமான பொருட்கள் கண் டெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணத் தமிழரசர்களுள் முதல் அரசனான குலசேகர சிங்கையாரியன் இபன்பற்றுற்றா வந்தகாலத்தில் (கி. பி. 1344 இல்) ஆட்சிபுரிந்த மார்த்தாண்ட சிங்கையாரியன் பி. பி 1380 வரை ஆட்சி நடத்திய வரோதய சிங்கையாரியன் (பாண்டிய நாட்டுக்கு உதவி வழங்கியவன்) இலங்கை முழுவதையும் 12 ஆண் டுகள் ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்து சிங்கள அரசுகளிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறைபெற்ற செயவீரசிங்கையாரியன் (கி. பி: 1380-1410) சிங்கைப்பரராச சேகரன் (கி. பி. 1478-1517) முதலாம் சங்கிலியன் கி பி. (1519-1565) ஆகியோர் யாழ்ப்பாண அரசில் ஆற்றல் மிக்க புகழுடன் விளங்கிய மன்னர்களாவர்.

யாழ்ப்பாண அரசின் எல்லைகள் பொதுவாக இன்றைய வடக்கு கிழக்கு மாகாணங்களை முழுமையாகவும், வடமேல் மாகாணக்கரையோரம் (புத்தளம்) என்பவற்றை உள்ளடக்கியதாகவும் இருந்தன. ஆயினும் அவ்வப்போது ஆட்சி செய்த மன்னர்களின் ஆற்றல் ஆளுமைகளுக்கேற்ப விரிந்தும் சுருங்கியும் வந்தன. கிழக்கு மாகாணத்திலும் வன்னிப்பகுதியிலும் யாழ்ப்பாண அரசரின் ஆளுமையை ஏற்றுத் திறை செலுத்திப் பல சிற்றரசுகள் செயற்பட்டு வந்தன. யாழ்ப்பாண மன்னர் ஆற்றல் குறையாத காலங்களில் கிழக்கு மாகாணப்பகுதிகளின் சிற்றரசர்கள் கண்டியரசின் ஆளுமையை ஏற்றும் தனித்தும், வன்னிச் சிற்றரசர்கள் தனித்து ஆட்சி நடத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு - 8

## இயல்: 01

## ஈழத்தமிழர் தாயகம்

### குறிக்கோள்கள்:

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் நன்கு தெரிந்துகொள்வர்

1) விசயனும் அவன் தோழர்களும் இலங்கையிற் குடியேறுவதற்கு முன்னரே தமிழரின் மூதாதையர்களான இயக்கர் நாகர் என்போர் இலங்கையிலே வாழ்ந்தனர்; தனியாட்சி நடத்தினர் என்பதைத் தெரிந்துகொள்வர்.

2) கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்களாற் பயன்படுத்தப்பட்ட தொல்லியற் சான்றுகள் தமிழகத்திற் காணப்படுவதுபோல் இலங்கையிலும் காணப்பட்டுள்ளமையைக் கொண்டு இலங்கையிலே தமிழினத்தின் தொன்மையை அறிந்துகொள்வர்.

3) தமிழ் மன்னர்கள் அனுராதபுரத்திலும் அதற்குத் தெற்கேயும் ஆட்சி நடத்தியிருக்கின்றனர் என்பதையும், வட இலங்கையிலே தொடர்ச்சியாக வாழ்ந்தும் ஆட்சி நடத்தியும் வந்திருக்கின்றனர் என்பதையும் அறிவர்.

4) கி பி. 1215இல் மாகனின் படையெடுப்பின் பின் இலங்கையின் வடகிழக்குப்பகுதி தமிழ்ப் பகுதியாகவும் தென்மேற்கு மலையாப் பகுதிகள் சிங்களப் பகுதிகளாகவும் மாறின என்பதைத் தெரிந்துகொள்வர்.

5) கி. பி. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 17 ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை யாழ்ப்பாணத் தமிழரசின் பகுதிகளாக இன்றைய வடகிழக்கு மாகாணப்பகுதிகளும் புத்தளம் மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளும் இருந்துவந்தன என்பதனை அறிந்துகொள்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) தமிழர் தாயகப்பகுதி ஏறத்தாழ 20,000 ச.கி. மீற்றர் என்பதை அறிந்துகொள்வர்,

7) கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் பின்னரும் ஆட்சியுரிமை பறி போன பின்பும் வடகிழக்கு இலங்கையும் புத்தளக் கரை யோரமும் முழுமையாகத் தமிழர்களின் வாழ்விடங்களாகவே இருந்துவந்தன என்பதனைத் தெரிந்துகொள்வர்.

8) கி: பி. 1873 காலப்பகுதியில், வடகிழக்கு மாகாணப்பகுதி களில் 1% இற்கும் குறைவான சிங்கள மக்களே வாழ்ந்து வந்தனர் என்பதையும் தெரிந்துகொள்வர்.

9) கடந்த 50 ஆண்டுகாலங்களில் சிங்கள ஆட்சியாளர்களினால் 1/3 பகுதிக்கும் மேற்பட்ட தமிழரின் தாயகப்பகுதி நிலங் களிற் சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்த்தப்பட்டு, தமிழர் பகுதியிற் சிங்களவர் குடித்தொகை 13%ஆக உயர்த்தப்பட் டுள்ளது என்பதனை உணர்ந்துகொள்வர்.

10) பெருங்காடாக இருந்த பகுதிகளைத் தமிழருக்கு வழங்கிய சிங்கள ஆட்சியாளர், தமிழர்கள் அவற்றைப் பெரும்பணச் செலவினாலும் உடலுழைப்பினாலும் திருத்திச் செப்பனிட் டபின் அவர்களிடமிருந்து பிடுங்கிச் சிங்களவர்களுக்கு வழங் கினர் என்பதைத் தெரிந்துகொள்வர்.

11) ஆங்கிலேயர் தமிழ் சிங்களப் பகுதிகளை ஒன்றிணைத்து ஆட்சி செய்ததற்கு முன்னரும் (1827 இலும்) தமிழ்ப்பகுதி சிங்களப் பகுதியென மாகாணங்களை வேறுபடுத்திய காலத் திலும் (1873 இலும்) சிங்களவர் ஆட்சி தொடங்கிய காலத் திலும் (1946 இலும்) கடைசியாகக் குடித்தொகை கணக்கெடுத்தபோதிலும் (1981 இலும்) ஒவ்வொரு தமிழர் மாவட்டத்திலும் இருந்த சிங்கள மக்களின் குடித்தொகை யை அறிந்து கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்: 02

## மகாவம்சம் வரலாற்று நூலல்ல

### குறிக்கோள்கள்:

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் நன்கு அறிந்துகொள்வர்

1) வாய்மொழியாக, செவிவழியாக புத்தபிக்குமாரரால் விகாரைகளிற் பேணப்பட்ட 900 ஆண்டுகால மரபுக்கதைகளை வைத்து எழுதப்பட்ட பௌத்தநெறி இலக்கியந்தான் மகாவம்சம் என்பதனை அறிந்துகொள்வர்.

2) மகாவம்சம் ஒரு பௌத்த தொன்மமே (புராணமே) தவிர வரலாற்று நூலல்ல என்பதைத் தெரிந்துகொள்வர்.

3) மகாவம்சம் எழுதப்பட்டதன் நோக்கம் தேரவாத பௌத்த நெறியை மேன்மைப்படுத்துவதே என்பதனை அறிந்து கொள்வர்.

4) நீண்டகாலம் நல்லாட்சி புரிந்த மன்னர்களின் வரலாறுகளை முற்றாக மூடிமறைத்துவிட்டு குறுகிய காலம் ஆட்சி நடத்திய தேரவாத பௌத்தத்தைப் புரந்த மன்னர்களுக்கு மட்டும் மகாவம்சம் மூதன்மையிடம் கொடுத்திருப்பதை அறிந்துகொள்வர்.

5) விசயனின் வருகைக்கு முன்னரும் இலங்கைத்தீவில் நாகரீகமான மக்கள் வாழ்ந்ததையும் அரசுகள் இருந்ததையும் மகாவம்சம் தன்னையறியாமலே வெளிப்படுத்தி விட்டதை அறிந்துகொள்வர்.

6) விசயனின் வருகையின் பின்னரே நாகரிகமான மக்கள் வந்தனரென்றும் ஆட்சி நிலவியது என்றும் மகாவம்சம் கூறும் கூற்று உண்மைக்கு மாறானது என்பதையும் அது மகாவம்சத்தின் முன்னுக்குப்பின் முரணான தன்மையைக் காட்டுகிறது என்பதையும் அறிந்துகொள்வர்.

7) வன்முறையையும் இனவெறியையும் பௌத்தவெறியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டிவிடும் நோக்கோடு திட்டமிட்டு எழுதப்பட்ட நூல் மகாவம்சம் என்பதைத் தெரிந்துகொள்வர்.

8) இலங்கைத்தீவில் நிலவிய பல்வேறு அரசுகளில் அனுராதபுர அரசை மட்டுமே மையமாக வைத்து மகாவம்சம் எழுதப்பட்டது என்பதைப் புரிந்துகொள்வர்.

9) அனுராதபுரத்தோடு தொடர்புடைய அரசுகள் பற்றியும் அத்தொடர்புகள் பற்றியும் மகாவம்சத்தாற் கூறப்பட்ட நேரத்தில் அவை தமிழ் அரசு பற்றியதாக அமைந்துவிட்டன என்பதையும் அறிந்துகொள்வர்.

10) மகாவம்சத்தின் முரண்பாடுகளைப் பட்டியற்படுத்துவர்.

11) மகாவம்சத்தின் நம்பமுடியாத கூற்றுக்களைப் பட்டியற் படுத்துவர்.

12) மகாவம்சத்தை எதிர்த்துக் குரல் கொடுத்த சிங்கள அறிஞர்கள் பற்றியும் அவர்களின் கூற்றுக்கள் பற்றியும் தெரிந்து கொள்வர்.

13) சிங்களமொழியின் தோற்றத்துக்கு முன்னரே தமிழ்மொழி செழுமைமிக்கதாக இருந்தது என்பதை இலக்கியச் சான்று களுடன் அறிந்துகொள்வர்.

14) மகாவம்சம் துட்டகைமுனுவின் புகழ்பாடும் நூல் என்பதை அறிந்துகொள்வர்.

# இயல்: 03

## போர்த்துக்கேயர் இலங்கையில் வேரூன்றிய வரலாறு

### குறிக்கோள்கள்:

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் நன்கு தெரிந்துகொள்வர்

1) போர்த்துக்கேய அரசு பற்றியும் அவர்கள் கீழைநாடுகளுக்கும் இலங்கைக்கும் வருகை தந்த சூழ்நிலையைப்பற்றியும் அறிந்திருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் வருகை யின்போது யாழ்ப்பாண அரசு, கோட்டை அரசு, கண்டி யரசு என மூன்று அரசுகள் நிலவியமைபற்றியும் அவற்றில் யாழ்ப்பாண அரசு சிறப்புப் பெற்றிருந்தது என்பதையும் விளங்கிக்கொள்வர்,

3) கோட்டை அரசான 8ஆம் வீரபராக்கிரமபாகுவுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில், செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை பற்றித் தெரிந்திருப்பர்.

4) கி. பி. 1521 இல் 7ஆம் விஜயபாகுவின் புதல்வர்கள் மூவர் தந்தையைக் கொன்றுவிட்டு ஆட்சியைத் தங்களுக்குட் பங் கிட்டுக்கொண்டது பற்றித் தெரிந்துகொள்வர்.

5) மாயாதுன்னையின் சீதவாக்கை அரசு எழுச்சி கொள்வதற்கு வாய்ப்பான சூழ்நிலைபற்றித் தெரிந்தவராவர்.

6) போர்த்துக்கேயரின் வல்லாண்மை (வல்லாதிக்க) முயற்சி களைத் தடுக்கத் தமிழ்மன்னனான 1ஆம் சங்கிலியன் எடுத் துக்கொண்ட நடவடிக்கைகளை நன்கு தெரிந்துகொள்வர்.

7) விதியபண்டார போர்த்துக்கேயரின் "மண்ணைக் கவரும்" முயற்சிக்கு எதிராகச் செயற்பட்டான் என்பதை அறிந்து கொள்வர்.

8) 7ஆம் புவனேகபாகு, தர்மபால ஆகியோரின் இனப்பற்றோ நாட்டுப்பற்றோ அற்ற நடவடிக்கைகளைப் பற்றி அறிந்து கொள்வர்.

9) மாயாதுன்னையின் தன்னலப்போக்கைப் பற்றித் தெரிந்து கொள்வர்.

10) தேசப்பற்றோ இனப்பற்றோ அற்ற சிங்கள மன்னர்களின் செயற்பாடுகளினாலேதான் போர்த்துக்கேயரிடம் கோட்டை ஆட்சி சென்றடைந்தது என்பதை உணர்ந்து கொள்வர்.

11) வீரத்துடன் தமிழ் மன்னரும் மக்களும் போர்த்துக்கேயருக் கெதிராகப் போரிட்டபோதிலும் சிங்களவர் போர்த்துக்கேய ருக்குக் கூலிப்படையாகச் செயற்பட்டு யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கேயர் கைப்பற்றத் துணையாயினர் என்பதை அறிந்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்: 04

## வன்னியின் தொன்மையும் தமிழரசுகளும்

### குறிக்கோள்கள்:

பின்வருவனவற்றை எமது மாணவர்கள் நன்கறிந்துகொள்வர்

1) வன்னிமண்ணின் எல்லைகளைத் தெரிந்துகொள்வர்.

2) வன்னிமண்ணில் வரலாற்றுக்காலத்துக்கு முன்னிருந்தே திராவிட இனத்தவர்களான நாகர்கள் (தமிழர்கள்) வாழ்ந்தனர் என்பதையும் அதற்கான தொல்லியற் சான்றுகளையும் அறிந்துகொள்வர்.

3) வன்னியிற் கண்டெடுக்கப்பட்ட 2600 ஆண்டுகளுக்கு முற்பட்ட எலும்புக் கூடுகள் திராவிட இனத்தவருடையவை என்பதை அறிந்துகொள்வர்.

4) பூநகரிப் பகுதியிற் கண்டெடுக்கப்பட்ட தொல்லியற் பொருட்கள் எவை என்பதையும் அவற்றின் காலங்களையும் அறிந்து கொள்வர்

5) வன்னியில் கி.மு. 3ஆம் நூற்றாண்டின் முன் தமிழராட்சி நிலவியமையை அறியக்கூடிய சான்றுகள் பற்றி அறிந்து கொள்வர்.

6) வன்னி மண்ணை ஆட்சி செய்தவர்களில் புகழ் பூத்த மன்னர்களின் பெயர்களை அறிந்துகொள்வர்.

7) பனங்காமத்திலிருந்து ஆட்சி செய்த கயிலைவன்னியனின் வீரச் செயல்களைத் தெரிந்துவைத்திருப்பர்.

8) 1ஆம் சங்கிலியனுக்குப் பின் ஆட்சிசெய்த ஆளுமைமிக்க இலங்கைத்தமிழ் மன்னன் கயிலைவன்னியன் என்பதைத் தெரிந்துவைத்திருப்பர்.

9) வன்னியர்களுக்கு அஞ்சிப் போர்த்துக்கேயர் கட்டிய கோட்டைகள் எவை என்பதைத் தெரிந்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) பண்டாரவன்னியனிடம் இருதடவை தோல்வியைத் தழு விய ஐரோப்பிய படைத்தலைவன் யார் என்பதைத் தெரிந்துவைத்திருப்பர்.

11) பண்டாரவன்னியனை வெற்றிகொள்ள ஆங்கிலேயர் 3 பகு திகளிலிருந்து பெரும் படையெடுப்பை மேற்கொண்டனர் என்பதை அறிந்துகொள்வர்.

12) கைலைவன்னியன் 38ஆண்டுகாலம் சிறப்புற ஆட்சி நடத் திய பனங்காமப் பகுதியிலேதான் பண்டாரவன்னியன் வீரச் சாவடைந்தான் என்பதை அறிந்துகொள்வர்.

13) ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்ட இறுதி இலங்கை மன் னன் பண்டாரவன்னியன் என்பதை அறிந்துகொள்வர்.

14) பண்டாரவன்னியன் ஆட்சிதான் கடைசி இலங்கை மன்ன னின் ஆட்சி என்பதையும் 1815இல் ஆங்கிலேயருடனான போரில் தோல்வியடைந்த கண்டிமன்னன் விக்கிரமராஜ சிங்கன் தமிழகத்து நாயக்க மன்னன் என்பதையும் அறிந்து கொள்வர்.

15) இலங்கையில் 1739ஆம் ஆண்டுடன் கடைசிச் சிங்கள மன் னராட்சி முடிந்து விட்டதை அறிந்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக்கல்வியும் வரலாறும்
## ஆண்டு 8 - ஆசிரிய வழிகாட்டி

## இயல்: 01

### ஈழத்தமிழர் தாயகம்

புத்தர் பரிநிர்வாணமடைந்த 9ஆது மாதம் இலங்கையின் மையப்பகுதிக்கு வந்து இயக்கர்களின் பேரவைக் கூட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்றார். இயக்கர்களுக்கு அச்சத்தை உண்டாக்கினார். பின்னர் அவர்களது அச்சத்தையும் துயரத்தையும் போக்குகிறேன் என்று அவர்களை ஒன்றுகூடச்செய்து கிரித்துவிபத்தில் ஒதுங்கச்செய்தார் என்பது மகாவம்சத்தின் 1ஆவது இயலில் 23-30 ஆவது சொற்றொடர்களிலிருந்து அறிய முடிகிறது. மகாவம்சம் (1: 23-30)

புத்தர் பரிநிர்வாணமடைந்த 5ஆவது ஆண்டில் நாகதீபத்தில் இருந்த நாகர்கள் மீது இரக்கம் கொண்டு அங்கு சென்றார். அங்கிருந்த நாகர்கள் அற்புத ''சக்தி'' களால் ஆற்றல் பெற்றிருந்தனர் 'இரத்தின' அரியணையொன்றிற்காக நாக மன்னர்களான மகேந்திரனுக்கும் அவனது மருமகனான குலாதரனுக்குமிடையில் ஏற்பட்ட சண்டையை விலக்கி அமைதி நெறியைப் புகட்டினார். அப்போது அங்கு திரண்டிருந்த நாகர்களுக்கு 'உபதேசம் செய்து தரிசன' மளித்துத் தமது ''பஞ்சசீலத்தில்'' ஈடுபடுத்தினார். மகாவம்சம் (1:47-62)

ஆதித்தநல்லூர் அரிக்கன்மேடு போன்ற தமிழகப்பகுதிகளிற் கிடைத்ததையொட்டிய கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்பொருட்சான்றுகள் தமிழீழத்தின் பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை, பூநகரி, காரைநகர் போன்ற பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டதால் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் வட இலங்கையிலே தமிழர் வாழ்ந்தனர் என்பது உறுதியாகின்றது;

விடுதலைப் புலிகளின் போராட்டங்களையடுத்து திருமலையிலுள்ள யான் ஓயாப் பகுதி, மணலாற்றுப் பகுதி, மன்னாரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடு முந்திரிகைத்தோட்டம் சிலாபத்துறைப் பகுதிகளிற் குடியேறிய சிங்களவர்கள் அப்பகுதிகளை விட்டுத் தப்பியோடிவிட்டனர்.

மன்னாரிற் பெரியபண்டிவிரிச்சான் முந்திரிகைத்தோட்டம் பகுதிகளிலும் பெருங்காடுகளைப் பண்ணையமைக்கும்படி தமிழர்களுக்கு வழங்கிவிட்டு அவற்றைப் பெருஞ்செலவிலே தமிழ்மக்கள் திருத்திச் செப்பனிட்டுக் கிணறுகளும் வெட்டிக் கட்டியதன் பின் அவர்களை வெளியேற்றியது தொடர்பான செய்திகளைத் திரட்டி மாணவர்களுக்கு விளங்கப்படுத்துதல் வேண்டும்.

1988 டிசெம்பரில் ஒலிபெருக்கியூடாக 45 ஊர்களைச் (கிராமங்களைச்) சேர்ந்த 13,500 தமிழ்மக்களை 24மணிநேரத்திற்குடியகலுமாறு சிங்களப் படையினரால் அறிவிக்கப்பட்டது; முல்லைமாவட்டத்தின் 24 ஊர்களைச்சேர்த 3641 குடும்பங்களும் வவுனியா மாவட்டத்தின் 17ஊர்களைச்சேர்ந்த 1410 குடும்பங்களும் திருமலை மாவட்டம் தென்னமரவாடி போன்ற பகுதிகளினதும் எஞ்சிய குடும்பங்களும் ஓரிரவுக்குள் வெளியேறின.

கடந்த 2000ஆண்டுகளாகப் பேணிக்காக்கப்பட்டுவந்த தமிழர் நிலங்கள் 60 ஆண்டுகாலச் சிங்கள ஆட்சியிற் பறிபோயிருக்கின்றன. இந்தநிலை தொடர்ந்தால் தமிழ் மக்களுக்கென ஒருபகுதி இலங்கையில் இருக்காது என்பதை விளங்கப்படுத்தல் வேண்டும்.

தமிழர் பகுதியென இலங்கையில் ஒரு பகுதி இருக்கக்கூடாது என்பது சிங்கள ஆட்சியாளரின் எண்ணமாக-விருப்பமாக இருந்துவருகிறது. இதை உறுதிப்படுத்துவது போன்று 23-3-1986 இல் அன்றைய சிறிலங்கா குடியரசுத்தலைவர் (ஜனாதிபதி) ஜே.ஆர் ஜெயவர்த்தன இரந்தெனிகல நீர்த்தேக்கக்குள விழாவில் பேசுகையில் ''வடக்கிலும் கிழக்கிலும் போர் முடிவடைந்ததும் திருகோணமலையில் யான்ஓயாத் திட்டத்தையும் அம்பாறையில் லகுகலத்திட்டத்தையும் அரசு தொடங்கிவைக்க இருக்கின்றது. இது ஒரு சிங்கள நாடு, அவர்கள் சென்று குடியேற வேறொரு நாடு இல்லை. மகாவலித்திட்டம் இந்த நாட்டின் சிங்களவருக்கே உரியது. சிங்கள விவசாயிகளே இதன் பெரும்பாலான தன்மைகளை அனுபவிக்க உள்ளார்கள், பயங்கரவாதிகளது நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டதும் ஜப்பானிய உதவியோடு வவுனியாவில் மொறகந்தத்திட்டம் தொடங்கப்படும்'' எனக்குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டார். இதுபோன்றே தாயகக்கோட்பாட்டை ஒழித்துக் கட்ட வடகிழக்கில் சிங்கள மக்களைக் குடியேற்றுமாறு முன்னாள் விமானப்படை அலுவலர் மார்க்செனிவரத்னா கேட்டுக் கொண்டார். வடகிழக்கு மகாணங்களைத் துண்டாடுவது சிங்கள 'ஆட்சியாளர்களின் முதன்மையான குறிக்கோளாக இருந்துவருகிறது வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, அனுராதபுரம் மாவட்டங்களுக்கிடையே வெலிஓயா என்னும் மாவட்டத்தை அமைக்கும் முயற்சி ஐக்கிய தேசியக்கட்சி அரசால் மேற்கொள்ளப்பட்டுத் தமிழர்களின் கடும் எதிர்ப்பினால் இடைநிறுத்தப்பட்டது.

பெங்களூரில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் ராஜிவ்காந்திக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது மட்டக்களப்பு மாவட்டத்தோடு, திருமலை, அம்பாறை மாவட்டங்களின் தமிழ்ப்பகுதிகள் சிலவற்றை உள்ளடக்கிய தமிழ்மாகாணமும் அத்தமிழ் மாகாணத்துக்கும் வடமாகாணத்துக்குமிடையில் திருகோணமலைச் சிங்கள மாகாணம் அமையவேண்டும் என்றும் புதியதிட்டத்தைச் சிறிலங்கா அரசு முன்வைத்தது.

☞ பாடநூலிலே சிங்களக் குடியேற்றம் தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் தேசப்படங்கள், வரைபடங்களைக் கரும்பலகையிலே பெரிதாகக் கீறி மாணவர்களுக்கு விளங்கப்படுத்தவேண்டும்.

# இயல்: 02

## மகாவம்சம் வரலாற்று நூலல்ல

மகாவம்சம் வரலாற்று நூலல்ல என்று சிங்கள வரலாற்றறிஞர்கள் பலர் கூறிய கூற்றுக்கள் பாடநூலிலே குறிப்பிடப்பட்டுள்ளன;

மகாவம்ச ஆசிரியர் மகாநாமதேரர் தனக்கு உடன்பாடில்லாத வரலாற்று நிகழ்வுகளைத் திட்டமிட்டு மறைத்துள்ளது பற்றி மகாவம்சத்தைப் பாளிமொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கைகர் என்பவர் குறிப்பிட்டுள்ளார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மகாவம்ச ஆங்கில மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் "மகாவம்சத்திலே கூறப்பட்டதிலல்ல; கூறப்படாதவையாலேயே தீர்வுகாணமுடியாத சிக்கலாகியுள்ளது" என்று கூறியுள்ளார்.

மகாவம்சத்தை முதன்முதலிலே தமிழில் மொழிபெயர்த்த எஸ். சங்கரன் தனது முன்னுரையில் "மகாவம்சத்தை முற்றிலும் ஆதாரபூர்வமான வரலாறாக எடுத்துக்கொள்வது சரியல்ல" என்று கூறியுள்ளார்.

"பண்டைய ஈழம்" வரலாற்று நூலின் ஆசிரியர் திரு. வே. க. நடராசா அவர்கள் "மகாவம்சத்தில் அதன் ஆசிரியர் தான் விரும்பியவற்றைச் சேர்த்தும் விரித்தும் சுருக்கியும் தவிர்த்தும் எழுதியுள்ளார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மகாவம்சத்தை ஆராய்ந்து படித்த அறிஞர்கள் பலரும் அதைப் புராணமென்றும் புராணப்பதிவேடு என்றும் கூறியுள்ளனர்!

எல்லாளன் - துட்டகைமுனு போரைத் தமிழர் - சிங்களவர் போரென மகாவம்சம் விரித்துக் காட்டுகிறது. ஆனால் எல்லாளனது படைத்தலைவனின் மருமகனான நந்திமித்திரன் துட்டகைமுனுவின் பத்துப் படைத்தலைவர்களில் முதல்வனாக இருந்தான் என்பதையும் மகாவம்சமே எடுத்துக்கூறுகின்றது.

வன்முறையை இனவெறியைத் தூண்டுவதில் உலகில் முதலாவது நூலாக மகாவம்சத்தைக் குறிப்பிடலாம். அதற்கு மகாவம்சம் குறிப்பிடும் பின்வரும் கூற்றே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

"நமது மார்க்கத்தை நம்பாதவர்கள் தீயவாழ்வை மேற்கொண்டவர்கள் மிருகங்களை விட உயர்வாக மதிக்கப்படக் கூடாதவர்கள். அவர்கள் கொல்லப்பட்டதையிட்டு நீ சுவர்க்கத்துக்குப் போகும் பாதையில் எவ்விதத் தடையும் ஏற்படாது" என்று துட்டகைமுனுவுக்குப் பியாங்குதீபத்துத்தேரர்கள் ஆறுதல் கூறினர் என மகாவம்சம் (25: 110-111) கூறுகிறது

மகாவம்சம் துட்டகைமுனுவை "கதாநாயகனாக" வைத்து எழுதப்பட்ட நூல். அதிலும் துட்டகைமுனுவின் அரசியற் பணிகளுக்கு 4 இயல்கள் ஒதுக்கிவிட்டு பௌத்தத்திற்கு ஆற்றிய தொண்டுக்கு 7 இயல்கள் ஒதுக்கப்பட்டதிலிருந்து தேரவாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தத்திற்கு முதன்மையளித்து எழுதப்பட்ட நூல் அது ன்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மகாவம்சத்தின் மூதனூலாகக் கருதப்படுகின்ற தீபவம்சத் திலே குவேனியைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

மகாவம்சம் "சீரும் சிறப்பும் மிக்க ஆட்சி" "நாட்டின் பொற்காலம்" எனப் புகழும் ஆட்சிகள் தமிழர்களை அடக்கி வெற்றி கொண்ட வடஇலங்கையின் மீது ஆளுமை செலுத்திய ஒரு சில ஆட்சிகளைத்தான். அதேநேரம் வடஇலங்கையிலிருந்து தென்னிலங்கை வரை ஆட்சி செலுத்திய தமிழ் மன்னர்களை "ஆக்கிரமிப்பாளர்கள்" என்றும் அவர்களது ஆட்சிக்காலங்களை "இருள் சூழ்ந்த காலங்கள்" என்றும் குறிப்பிடுகின்றது. அதிலும் நீதியான ஆட்சியாளர்கள் பௌத்தநெறியைப் புரந்தனர் என்று தானே குறிப்பிடும் சில தமிழ்மன்னர்களையும் அது திட்டித் தீர்த்திருக்கிறது.

மகாயான பௌத்தனான சிங்கள மன்னன் மகாசேனனை மூடன் "மதிகெட்டவன்" சட்டத்தை மீறியவன்" என்றெல்லாம் திட்டித்தீர்த்திருக்கிறது.

# இயல்: 03

## போர்த்துக்கேயர் இலங்கையில் வேரூன்றிய வரலாறு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு (கி.மு. 543-கி.பி. 1521) மேலாகத் தங்களுக்குள் மோதிக்கொண்டாலும் தமிழரும் சிங்களவரும் மட்டுமே இலங்கைத்தீவிலே வாழ்ந்தும் ஆட்சிநடத்தியும் வந்திருக்கின்றனர். கி.பி. 1521 ஆம் ஆண்டுக்குப்பின் இலங்கைத்தீவின் ஒரு பகுதியில் ஆட்சிநடத்திய சிங்கள மன்னர் குடும்பச் சண்டைகள், உடன்பிறந்தார் மோதல்கள் என ஆட்சியை யார் கைப்பற்றுவதென்று எழுந்த மோதல்களால் அவர்களில் ஒரு பகுதியினர் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து எதிர்பாராமற் கரையொதுங்கிய போர்த்துக்கேயரின் உதவியை நாடியதுடன் அவர்கள் செய்த உதவிக்கு ஈடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக உரிமை, களஞ்சியம் கோட்டை கட்டும் உரிமை என்பவற்றை வழங்கி இறுதியில் தம் நாட்டையே அவர்களுக்குத் தாரைவார்த்தனர், அதுமட்டுமின்றித் தீவின் இன்னொரு பகுதியிலிருந்து போர்த்துக்கேயரை விரட்டச் சிங்கள மன்னர்களுக்கு உதவியதுடன் தமது பகுதிக்குள் போர்த்துக்கேயரை நுழைய விடாது நாட்டுப்பற்றோடு போர்புரிந்துவந்த யாழ்ப்பாணத்தமிழரசை வீழ்த்தவெனப் படையெடுப்பு நடத்திய போர்த்துக்கேயருக்குத் துணையாகப் போர்த்துக்கேயரைவிடப் பலமடங்கு கூடுதலான கூலிப்படையினராகச் சிங்கள இனத்தவர்கள் செயற்பட்டு இலங்கையில் போர்த்துக்கேயரை வலுவாக, நிலையாகக் காலூன்ற வழியமைத்துக் கொடுத்தனர்.

மாயாதுன்னை தன் வாணாளிற் பெரும்பாலும் போர்த்துக்கேயரை எதிர்த்துப் போரிட்டான். இருந்தபோதிலும் போர்த்துக்கேயரிடம் தோல்வியுற நேர்ந்தபோது அவர்களின் கட்டுப்பாடுகளையேற்றுத் தனக்குதவிக்கு வந்த சமோரினின் படைத்தலைவர்களின் தலைகளைக் கொய்து போர்த்துக்கேயரிடம் ஒப்படைத்ததும் கோட்டையரசைத் தான் அடைவதற்காகத் தனது அண்ணனான 7 ஆம் புவனேகபாகுவை எதிர்ப்பதற்காகப் போர்த்துக்கேயருடன் இணைந்து செயற்பட்டதும் மாயாதுன்னையின் தன்னல வெறியை எடுத்துக்காட்டுகிறது. வெளிநாட்டவரை விரட்டவேண்டும் என்ற நாட்டுப்பற்றுணர்வோடு மாயாதுன்னை போர்த்துக்கேயரை எதிர்க்கவில்லை என்பதும் தனக்கு ஆட்சி கிடைக்குமிடத்துப் போர்த்துக்கேயருடனும் இணைந்து செயற்பட முன்வந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விதியபண்டார நாட்டுப்பற்றும் இறைநெறிப்பற்றும் வெளிநாட்டவரை இலங்கை மண்ணிற் காலூன்ற விடக்கூடாது என்ற உணர்வும் கொண்ட சிங்கள அரச குடும்பத்தவனாக இருந்தான். அவன் தனது மாமனான ஏழாம் புவனேகபாகுவிற்காகவோ தனது மகனான தர்மபாலவுக்காகவோ போர்த்துக்கேயரைச் சார்ந்து நின்றவனல்லன்.

1ஆம் சங்கிலியன் (கி. பி. 1519-1565) போர்த்துக்கேயரை இலங்கை மண்ணில் எங்கும் வேரூன்றவிடாது தடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்பட்டான்.

✠ வன்கவர்வு (ஆக்கிரமிப்பு) நோக்குடனான இறைநெறிப் பரப்புரைகளை ஒடுக்கினான்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கண்டி மன்னனிடமிருந்து போர்த்துக்கேயருக்குக் கப்பலில் அனுப்பப்பட்ட செல்வங்களைப் பறிமுதல் செய்தான்.
- போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்ட நேரங்களில் மாயாதுன்னைக்குப் படையுதவி வழங்கினான்.
- விதியபண்டாராவுக்குப் புகலிடம் கொடுத்தான்.
- போர்த்துக்கேயருக்கெதிராகப்போரிட அவனுக்குப் படைக் கலப்பயிற்சி கொடுத்தான்.
- போர்த்துக்கேயருக்கெதிராகப் போராடினான்.
- போர்த்துக்கேயருக்கெதிராகப் போராடிய கண்டி மன்ன னுக்கு உதவியாகத் தமிழகத்திலிருந்து சென்ற படைகளைத் தனது பகுதியினூடாகச் செல்லவிட்டான்.
- அதனாற் போர்த்துக்கேயரின் சீற்றத்துக்குள்ளாகினான்.

# இயல்: 04

## வன்னியின் தொன்மையும் தமிழரசுகளும்

ஜே. பி. லூயிஸ் என்பவர் வன்னியின் எல்லைகள் பற்றித் தனது "MANUAL OF VANNI" என்னும் நூலிற் குறிப்பிட் டுள்ளார்.

பழையகாலக் கட்டட இடிபாடுகள் தென்னியன்குளம் (தென் னவன்குளம்) பகுதியில் உள்ள செழியாவிற் பகுதியிலேயும் முத்தையன்கட்டு, பனங்காமம், நட்டாங்கண்டல் பகுதிகளிலே யும் பரவலாகக் காணப்படுகின்றன. முத்தையன்கட்டுப் பகுதி யிற் காணப்படுவது அகழியுடன் கூடிய கோட்டை அல்லது அரண்மனைக்குரிய இடிபாடாகும்.

கயிலைவன்னியன் கைலாயவன்னியன் எனவும் அழைக்கப் படுகிறான்.

17 ஆம் நூற்றாண்டிலே ஏழு வன்னிமைகள் காணப்பட்டன அவை பனங்காமம் மேற்பற்று, முள்ளியவளை, கருநாவல்பற்று கரிக்கட்டுமூலை, தென்னமரவடி, யசட்டிகுளம் என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி பண்டைக்காலத்திலிருந்தே தமிழர்களின் வேளாண் பகுதியாயிருந்துவருகிறது என்பது வன்னியிலுள்ள குளப்பெயர்களிலிருந்தும் மடு, மோட்டை, கேணி, முறிப்பு, வாய்க்கால் கட்டு என முடியும் ஏராளமான ஊர்ப் பெயர்களிலிருந்தும் தெளிவாகிறது.

கண்டியின் இறுதிச் சிங்கள அரசன் நரேந்திர சிங்கன் (1707-1739) ஆவான். அவனுக்குப்பின் ஆட்சியிலிருந்தவர்கள் தமிழகத்து நாயக்கர்களாவர்.

# ஆசிரியர்களுக்கு உதவும் பிற குறிப்புக்கள்

## 1ஆம் பராக்கிரமபாகுவுக்குப்பின் பொலநறுவவில் ஆட்சிசெய்தவர்கள்

| | |
|---|---|
| 1ஆம் பராக்கிரமபாகு | கி. பி. 1053-1086 பாண்டியர் தொடர்புடையவன் |
| 2ஆம் விசயபாகு | கி. பி. 1186-1187 பராக்கிரமபாகுவின் மருமகன் |
| 6ஆம் மகிந்தன் | கி. பி. 1187 கலிங்கமரபினன் |
| நிசங்கமல்லன் | கி. பி. 1187-1196 மகிந்தன் அரசின் இளவரசன் |
| வீரபாகு | கி. பி. 1196 நிசங்கமல்லனின் மகன் |
| 2-ம் விக்கிரமபாகு | கி. பி. 1196 நிசங்கமல்லனின் தம்பி |
| சோடகங்கன் | கி. பி. 1196-1197 நிசங்கமல்லனின் மருமகன் |
| லீலாவதி (1) | கி. பி. 1197-1200 பாண்டிய இளவரசி (1ஆம் பராக்கிமபாகுவின் மனைவி) |
| * சாகசமல்லன் | கி. பி. 1200-1202 நிசங்கமல்லனின் தம்பி |
| கல்யாணவதி | கி. பி 1202-1208 நிசங்கமல்லனின் மனைவி |
| தர்மாசோகன் | கி. பி. 1208-1209 குழந்தை |
| அனிகங்கன் | கி. பி. 1209 |
| லீலாவதி (2) | கி. பி. 1209-1210பாண்டியஇளவரசி |
| * உலோகீசுவரன் | கி. பி. 1210-1211 கலிங்கநாட்டவன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| லீலாவதி (3) | கி. பி. 1211-1212 பாண்டிய இள வரசி |
| பராக்கிரமபாண்டியன் | கி. பி. 1212-1215 பாண்டிய இள வரசன் |
| மாகன் | கி. பி. 1215-1236 (24 ஆயிரம் தமிழர் படையோடு வந்து அரசைக் கைப் பற்றினான்.) |

★ தமிழர் படையுதவியுடன் ஆட்சிக்கு வந்தவர்

## அனுராதபுரத்தில் கடைசி மன்னன்

5ஆம் மகிந்தனுக்குப்பின் 1ஆம் இராசராசசோழன் கி. பி. 993

## பொலநறுவ ஆட்சியின் கடைசி 3மன்னர்கள்

1) லீலாவதி பாண்டிய இளவரசி கி. பி. 1211-1212 (பராக்கிரமபாகுவின் மனைவி)

2) பராக்கிரமபாண்டியன் (பாண்டிய இளவரசன்) கி. பி. 1212-1215

3) மாகன் தமிழர்படையுதவியோடு வந்து ஆட்சிசெய்தவன் கி. பி. 1215-1236

பொலநறுவவின் தொடக்க மன்னனும் 1ஆம் இராசராச சோழனே.

## கண்டியின் கடைசி 4மன்னர்கள்

1) விசயராசசிங்கன் (1739-1747 நரேந்திர சிங்கனின் மைத்துனன் (கண்ணுச்சாமி)

2) கீர்த்திசிறிராசசிங்கன் (1747-1782) விசயராசசிங்கனின் மைத்துனன்

3) இராசாதி ராசசிங்கன் 1782-1798) கீர்த்திசிறீ ராசசிங்கனின் தம்பி

4) விக்கிரமராசசிங்கன் (1798-1815) இராசாதிராசசிங்கனின் மைத்துனன்

## இலங்கை வரலாற்றை அறிய உதவும் நூல்கள் சிலவற்றின் பட்டியல்

| | நூலின் பெயர் | ஆசிரியர் |
|---|---|---|
| 01) | யாழ்ப்பாணச் சரித்திரம் | முதலியார் இராசநாயகம் |
| 02) | எல்லாளன் சமாதியும் வரலாற்றுமோசடியும் | கலாநிதி ஜேம்ஸ் K. இரத்தினம் தமிழில் - A. J. கனகரத்தினா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 பூந: தொல்பொருள் ஆய்வு ப. புஸ்பரத்தினம்
பல்கலைக்கழகவெளியீடு (யாழ்)

04) நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வம் I, II, III G. C. மென்டிஸ் தமிழாக்கம் சோ. நடராசன்

05) கள்ளியங்காட்டுச் செப்பேடுகள் பாகம் - I செ. குணசிங்கம் பேராதனைப் பல்கலைக்கழகம்

06) EARLY SETTLEMENT IN JAFFNA Ponnampalam, Ragupathy

07) ஈழத்தவர் வரலாறு கலாநிதி க. குணராசா

08) பண்டைய ஈழம் பாகம் I, II வே. க. நடராசா

09) பிராமிக்கல் வெட்டுக்களும் தமிழும் கலாநிதி சி. க. சிற்றம்பலம் யாழ்பல்கலைக்கழகம்

10) மகாவம்சம் (ஆங்கில மொழிபெயர்ப்பு)

11) சூளவம்சம் I&II ,, ,,

12) Ancient Ceylon H. PARKER

13) வன்னியன் கலாநிதி சி. பத்மநாதன்

14) மட்டக்களப்புத் தமிழகம் வித்துவான் வீ. சி. கந்தையா

15) Vanni And The Vanniyas C. S. NAVARATNAM

16) இலங்கைவாழ் தமிழர் வரலாறு பேராசிரியர் க. கணபதிபிள்ளை

17) மானத்தமிழ் மறவன் சொக்கன்

18) The Kingdom of Jaffna S. Pathmanathan

19) யாழ்ப்பாண வைபவமாலை முதலியார் குல. சபாநாதன்

20) யாழ்ப்பாண இராட்சியம் கலாநிதி சி. க. சிற்றம்பலம் யாழ் பல்கலைக்கழக வெளியீடு

21) யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு ,, ,,

22) வன்னியர் திலகம் (கயிலைவன்னியன் வரலாற்று நாவல்) முல்லைமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்க் குறிப்பிடுவனவற்றை மாணவர்கள் நன்கு தெரிந்துவைத்துக் கொள்ளக்கூடிய வகையில், செயற்பாட்டுத்திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும்.

தரம் 6

பாடம் 3

## எமது அயற் சமூகம்

இலங்கை அரசினால் விடுமுறை என அறிவிக்கப்பட்ட நாட்களும் இன இறைநெறி (மத) அடிப்படையிலான பாகுபாடுகளும்

✣ இலங்கை அரசால் 26 விடுமுறைநாட்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

✣ அவற்றில் 21 நாட்கள் அரச, வங்கி வர்த்தக விடுமுறை நாட்கள் ஏனைய 5 நாட்களும் வர்த்தக விடுமுறை நாட்களல்ல.

✣ அரசவங்கி வர்த்தக விடுமுறை நாட்களில்
பௌத்த சிங்களவருக்கு 15 இந்துக்களுக்கு 1 முஸ்லீம்களுக்கு 1 கிறிஸ்தவர்களுக்கு 1
பொதுவிடுமுறை 3: தேசியநாள், சித்திரைப்புத்தாண்டு, மேநாள்

பாடம் 4

## வீட்டில் உலோகப் பொருட்களைப்பயனுள்ள வகையிற் பயன்படுத்துதல்

✣ வீட்டிலே பயன்படுத்தும் பொருட்களையும் கேள்விப்படுகின்ற பொருட்களையும் பட்டியற்படுத்தல்.

✣ இப்பட்டியலிலுள்ளனவற்றை எளிதாகக் கிடைப்பவை, அரிதாகக் கிடைப்பவை, சிறீலங்கா அரசாலே கடந்த காலத்தில் தடைசெய்யப்பட்டவை என வகைப்படுத்தல்.

பாடம் 6

## தொழில்

✣ கட்டடத்துக்குத் தேவையான பொருட்களைப் பட்டியற்படுத்தல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவற்றிலே பொருண்மியத்தடையினால் நாம்பெறமுடியா திருந்த பொருட்களை வகைப்படுத்தல்.
- வடகிழக்கிலும் ஏனைய பகுதிகளிலுமுள்ள பாரிய தொழிற் சாலைகளை வகைப்படுத்திப் பட்டியலிடல்.
- அரசின் புறக்கணிப்பினாலே பின்தங்கிய எமது தொழில்கள்

பாடம் 7

## எமது கிராமம்

- சிறீலங்காவில் கிராமமேம்பாட்டுச் செயற்பாடுகள்.
- தமிழ்ப்பகுதிகள் மேம்பாடு இல்லாததுமட்டுமன்றி இருக்கும் வளங்களும் அழிக்கப்படும் நிகழ்வுகள்
- பழைமை நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் நிலை.

பாடம் 8

## இலங்கை மக்கள்

- மகாவம்சத்தின் அறிமுகம், அதன் உண்மைக்குமாறான முரண்பாடான தகவல்கள் (இவை பற்றி வன்னிச் சமூகக் கல்விமன்றத்தின் 8ஆம் ஆண்டு சமூகக் கல்வியும் வரலாறும் பாட நூலிலும் அதற்கான ஆசிரியர் கைந்நூற்பகுதியிலும் கூடுதல்விளக்கங்கள் உள்ளன.)
- விசயன் வருகைதந்ததாகக் கூறப்படும் காலத்துக்கு முன் பிருந்தே தமிழ்மக்கள் இலங்கையில் வாழ்ந்து வருவதற்கான (மறைக்கப்பட்ட) சான்றுகள்.
- சிறீலங்காவின் தேசியக் கொடி அமைப்புக் குழுவில் (செனற் றர்) மூதவை உறுப்பினர் நடேசனின் பெயர் இடம்பெறாத தன் காரணம்.
- ஐரோப்பியரின் இலங்கை வருகைக்குமுன் இருந்த மூன்று அரசுகளில் யாழ்ப்பாணத் தமிழரசே காலத்தால் முந்தியதும் வலிமைமிக்கதுமான அரசாகத் திகழ்ந்தது.

  "புத்ததர்மக் கோட்பாடுகளால் வளம்பெற்ற கலாசாரத் தைக்கொண்டவர்கள் நாம்" என 55 ஆம் பக்கத்திற்குறிப் பிடப்பட்டுள்ளது. இது பௌத்த சிங்களவர்களுக்காக எழு தப்பட்டது. தமிழ்மாணவர்களுக்குப் பொருந்தாது.

பாடம் 9

## வானிலை மாற்றங்கள்

- வானிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதிப்புகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◉ அரசு மக்கள் (பாது)காப்புக்காக எடுக்கும் முன்நடவடிக்கை கள்?

◉ சிறீலங்கா அரசு எடுக்கும் முன் நடவடிக்கைகள் எமக்கு உடன் அறியக் கிடைப்பதில்லை.

◉ புயல், வெள்ள நிவாரணங்கள் எமக்குக் கிடைப்பதில்லை.

தரம் 7

பாடம் 1

## எமது அயற் பாடசாலை

● சிங்களப்பகுதிப் பள்ளிகளின் நேர்த்தியும் வளமும்.
◉ தமிழ்ப்பகுதிப் பள்ளிகள் புறக்கணிப்பு
◉ குண்டு வீச்சுக்களினால் அழிவு, இடம்பெயர்வு
◉ ஆசிரியர் பற்றாக்குறை
◉ உபகரணத் தடை
◉ பாடநூல் வழங்கலிலே காலத்தாழ்வு (தாமதம்)
◉ ஊட்டம் (போசாக்கு)

பாடம் 2

## எமது நாட்டின் புவியியற் சுற்றாடலும் ஆரம்பக் குடியேற்றங்களும்

★ காடுவளர்ப்பில் இன்றியமையாமையும் பயன்களும்

★ அரசினால் அழிக்கப்படும் காடுகளும் அதற்கான காரணங் களும்.

★ அரசப்படைகளினால் அழிக்கப்பட்ட தென்னை பனை மரங் கள்.

★ தொடக்ககாலக் குடியேற்றங்கள் பற்றிய தவறான தகவல் கள்.

★ தொல்பொருள் ஆய்வுகளால் பொய்ப்பிக்கப்பட்டுள்ள மகா வம்சக்கூற்றுக்கள்.

பாடம் 3

## ஆரம்பக்குடியேற்றங்களில் நிர்வாகம்

⚜ மகாவம்சக்கூற்றுப்படியே பாண்டுகாபயனுக்கும் தொன்மைக் குடிகளுக்குமுள்ள தொடர்புகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✵ அவனது வளர்ச்சியிலே தமிழரின் பங்கு
✵ நூலிலே கூறப்படும் தேசிய கோத்திரத்தார்.

*பாடம் 4*

## இலங்கையில் உணவுப்பயிர்களும் வாழ்வாதார வழிகளும்

✵ இலங்கையின் தொன்மைக்குடிகளும் அவர்கள் பயன்படுத்திய உணவுப் பொருட்களும்.
✵ பாடத்தினூடாக வலிந்து திணிக்கப்பட்டுள்ள சிங்களச் சொற்கள்.
✵ பண்டைக்காலப் பயிர்ச்செய்கையும் இருட்டடிப்புச் செய்யப்பட்ட தமிழ்மன்னர்களின் பங்களிப்பும்.
✵ பொருளாதாரத்தடையால், பயிர்ச் செய்கையில் நாம் எதிர் நோக்கிய நெருக்கடிகள்.

*பாடம் 5*

## பௌத்தசமயம் எமது நாட்டிலே அறிமுகஞ் செய்யப்படல்

✵ புத்தர் எந்த வெளிநாட்டுக்குஞ் சென்றதில்லை என்று அவர் பற்றிய வரலாறு கூறுகிறது.
✵ மகாவம்சம் புத்தர் 3 தடவைகள் இலங்கைக்கு வந்ததாகக் கூறுகிறது.
✵ புத்தரின் காலம்பற்றியும் மகாவம்சம் கூறும் தகவல் மாறுபடுகிறது.
✵ மகாவம்சக் கூற்றுப்படி புத்தர் 3 தடவைகள் இலங்கைக்கு வந்ததாக ஏற்றுக்கொண்டாலும் அவற்றில் இரு தடவைகள் தமிழர்களின் முன்னோர்களான நாகர்களின் நலன்களுக்காகவே வந்திருக்கிறார்.
✵ பௌத்தம் அன்பையும் அறநெறியையும் வலியுறுத்தும் இறைநெறியாகும்.
✵ புத்தர் அன்புக்காக அரசைத்துறந்தார்.
✵ அசோகர் அன்புநெறியான பௌத்தத்தைக் கடைப்பிடித்து அரசியல் நாட்டத்தைக் குறைத்தார்.
✵ மகிந்தர், சங்கமித்திரை ஆகியோர் அரசைத்துறந்து பௌத்தநெறியை வளர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- துட்டகைமுனு பௌத்தத்தை நிலைநிறுத்த என 150 ஆயிரம் தமிழர்களைக்கொன்றான்.
- சிறீலங்கா ஆட்சியாளர்கள் ஆட்சியைப் பிடிப்பதற்காகத் தாம் கடைப்பிடித்துவந்த இறைநெறியை விட்டுவிட்டுப் பௌத்தத்தில் இணைந்தார்கள்.
- வாரிசுகளுக்கும் ஆட்சி கிடைக்க வழிவகை செய்தனர்:
- அடையார் ஆலமரம் அனுராதபுர வெள்ளரசு மரத்தை விடத் தொன்மையானது.
- பௌத்த ஆட்சியில் ஏனைய மதங்களின் உரிமைகள் மறுக்கவும் நசுக்கவும் படுகின்றன.

*தரம் 8*

*பாடம் 2*

## எமது அயல்நாடு இந்தியா

- சேனன், குத்திகன் ஆகியோரை இளவரசர்களெனத் தீப வம்சம் கூறும்போது, அதற்கு 2 நூற்றாண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்ட மகாவம்சம் அவர்களைக் குதிரை வணிகர்கள் எனக்குறிப்பிடுகிறது.
- 13 ஆம் நூற்றாண்டிலே புத்தரின் புனிதப்பல் குலசேகர பாண்டியனின் படையினரால் யாப்பகுவவிலிருந்து கைப்பற்றிக்கொண்டு செல்லப்பட்டது.
- 3ஆம் பராக்கிரமபாகு பாண்டிய நாடு சென்று பாண்டிய மன்னனைப்பணிந்து திறைசெலுத்திப் புனிதப்பல்லைப் பெற்றுவந்தான்.
- தமிழருக்குச் சார்பான மகாவம்சக்கூற்றுகளும் திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன.
- விசயன் பாண்டியநாட்டிளவரசி திருமணச்செய்தி திட்டமிட்டு மறைக்கப்படுகிறது.

  1ஆம் பராக்கிரமபாகு பாண்டிய இளவரசி திருமணச் செய்தி, மறைக்கப்பட்டுள்ளது.
- இலங்கையை ஆண்ட தமிழ்மன்னர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் எனக் கூறப்படுகின்றனர்.
- அதேநேரம் நிசங்கமல்லன் போன்ற வெளிநாட்டவர்கள் தேரவாத பௌத்தர்களாகையால், தேசியவீரர்களாக இந் நூலிற் காட்டப்படுகின்றனர்.
- தமது ஆட்சியை நிலைநிறுத்தவும் மீட்கவும் சிங்களமன்னர்கள் பெற்ற தமிழக உதவிகள் முறையாகக்கூறப்படவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

※ சிங்கள மன்னர்கள் தமிழக அரசியலிலே மேற்கொண்ட தலையீடுகள் தமிழக மன்னர்கள் இலங்கைமீது படையெடுக்க முதன்மைக் காரணமாக அமைந்தன. (இந்தியத்தலைவர்களான வ. உ. சி. சுபாஸ் சந்திரபோஸ் போன்றோரைப்பற்றி எதுவும் கூறப்படவில்லை,

பாடம் 3

## ஏனைய ஆசிய நாடுகள்

※ 1ஆம் பராக்கிரமபாகுவுக்கும் தமிழர்களுக்குமிடையிலான தொடர்புகளும், உறவுகளும். (1 ஆம் பராக்கிரமபாகுவின் பாட்டன், தந்தை, சிறியதாய், மனைவி போன்றோர் தமிழர்கள்)

※ அவனது வெற்றிக்கு உறுதுணையாக நின்றவர்கள் தமிழர்களானபடைத்தலைவர்கள். (பர்மாவெற்றியிலும், ரோகணவிலிருந்து புனிதப்பல் கைப்பற்றுவதிலும் மலையகப்படையெடுப்புகளிலும் தலைமைதாங்கிச் சென்றவர்கள் தமிழ்ப்படைத் தளபதிகள் )

※ காலியிற் கண்டெடுக்கப்பட்ட 14 ஆம் நூற்றாண்டின் "திரிபாஷா" (மூன்று மொழி) கல்வெட்டில், சிங்களமொழி இடம்பெறவில்லை. தமிழ், அரபு, சீன மொழிகள் மட்டுமே இருந்தன.

※ யப்பான் போன்ற நாடுகள் பௌத்த நாடு என்ற வகையில் இலங்கைக்கு உதவுகின்றன. ஆனால் இலங்கைப் பௌத்தப்பிரிவின் தேரவாதம் யப்பான் போன்ற நாடுகள் கடைப்பிடிக்கும் மகாயான பௌத்தத்துக்கு எதிராகவே வரலாற்றுக்காலத்திலிருந்து செயற்பட்டுவந்தது.

குறிப்பு;- உலகமக்கள் தொகையில் 30% கொண்ட தூரகிழக்கு நாடுகள் 8% நிலத்தையே கொண்டிருக்கின்றன. ஆனால் 3% மக்களைக்கொண்ட சோவியத்ரஷியா 40% நிலத்தைக் கொண்டிருக்கிறது.

பாடம் 4

## அனுராதபுர காலத்து நிர்வாகமுறை

※ பாண்டுகாபயனுக்கும் தொன்மைக்குடிகளான தமிழர்களுக்குமிடையில் இருந்த தொடர்புகள்.

※ மாமன்மாரின் தேடுதல் வேட்டையினின்றும் தப்புவதற்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மைக் குடிகளின் வாழ்விடத்திலே சிறு அகவையிலிருந்து வாழ்ந்தான்.

- தமிழ்ப்பிராமணனிடம் கல்விகற்றான்
- தொன்மைக்குடிகளான இயக்கர்களால், பாண்டுகாபயன் அவனது மாமன்மாரிடமிருந்து காப்பாற்றப்பட்டான்.
- பாண்டுகாபயனின் ஒரே மகன் மூத்தசிவன்.
- மூத்தசிவனின் மூத்தமகனே தேவநம்பியதீசன்,
- பௌத்தம் இலங்கைக்கு வருவதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே மூத்தசிவன் என்ற பெயர் விளங்கியிருக்கிறது.
- துட்டகாமினி காலத்தில், தென்னிந்திய அச்சுறுத்தல் இருக்கவில்லை.
- வாலகம்பா என்ற வட்டகாமினி தமிழர்களுடன் நடந்த போரிலே தோற்றோடும்போது அவர்களிடம் பிடிபடாமல் விரைந்து செல்வதற்காகத் துணைவியான சோமாவதியைத் தேரிலிருந்து இறக்கித்தள்ளிவிட்டுத் தப்பி ஓடினான். (இவன்பற்றி 7ஆம் ஆண்டு சமூகக்கல்வியும் வரலாறும் பாட நூலிலே கூறப்பட்டுள்ளது.)
- 1ஆம் கயபாகு இவன் தென்னிந்தியருடன் (தமிழருடன்) போர்புரிந்ததாகக் சொள்ளமுடியாது.
- மகாயான பௌத்தனாகையால் கயபாகுவின் நற்குணங்களையும் செயற்பாடுகளையும் மகாவம்சம் மூடிமறைத்துள்ளது.
- தமிழக மன்னர்களுடன் நட்புணர்வுடன் இருந்தான்.
- சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயிலெடுக்க மேற்கொண்ட கல்நீராட்டு விழாவிலே கலந்து சிறப்பித்தான்
- தன்தந்தை காலத்திலே கரிகாற் சோழனாற் பிடித்துச் செல்லப்பட்ட சிங்களவர்களை நட்புணர்வினால் மீட்டுவந்திருக்கக்கூடும்'
- இமயம்வரை படைநடத்திவென்ற சேரன் செங்குட்டுவன் ஏனைய சோழ, பாண்டிய தமிழ் மன்னர்களை இகழ்ந்ததைப் பொறுக்கமாட்டாமலே படையெடுப்பை மேற்கொண்டான்
- கி. பி. 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன்பற்றி 6ம் ஆம் நூற்றாண்டு நூலிற் கூறப்படாத செய்தியை 13 ஆம் நூற்றாண்டின் பூஜாவழி கூறுகிறது (இதை நம்பமுடியாது).
- அனுராதபுர ஆட்சிக் காலத்தில் இலங்கைமுழுவதும் ஒரு போதும் ஒருகுடைக்கீழ் இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 5

## அனுராதபுர காலத்துப் பொருளாதார நடவடிக்கைகள்

- தேரவாதபௌத்தரல்லாத தமிழ், சிங்கள மன்னர்களின் நடவடிக்கைகள் முற்றாக இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன.
- அனுராதபுரத்தின் இரண்டாவது மன்னனான மூத்தசிவனின் 60ஆண்டுகாலச் செயற்பாடுகள் முற்றாக மறைக்கப்பட்டுள்ளன.
- வடபகுதியிற் பெருங்குளங்களை அமைத்த எல்லாளன் போன்ற தமிழ் மன்னர்களது செயற்பாடுகள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளன.
- முதலாம் கயபாகு மகாயான பௌத்தனாகையால் அவனது 22 ஆண்டுகாலச் செயற்பாடுகள் அருங்குணங்கள் மகாவம்சத்தால் மறைக்கப்பட்டுள்ளன.
- தொன்மைக்கால மாந்தைத் துறைமுகத்தின் சிறப்புக்கள்.
- அருவியாறு கதம்பநதி என்று வடமொழியிலும் மல்வத்து ஓயா என்று சிங்களத்திலும் அழைக்கப்படுகிறது.
- தந்தையான தாதுசேனனைக் காசியப்பன் உயிரோடு சுருங்கையில் வைத்துக்கட்டிக்கொன்றான்.
- தமிழர் உதவிபெற்றுவந்த அரசுக்கட்டிலுக்குரியவனான முகலன் அல்லது முகல்லானன் காசியப்பனைத் தோற்கடித்தான். (தமிழர் உதவிபெற்று ஆட்சிநடத்திய சிங்கள மன்னர்களின் பெயர்கள் 7ஆம் ஆண்டு வன்னிச் சமூகக்கல்விமன்ற நூலிலே உள்ளன.)

பாடம் 6

## பொலன்நறுவ இராசதானி

- பொலன்நறுவ முதலிலே சோழரின் இராசதானியாக விளங்கியது.
- 1ஆம் விசயவாகு தனது தங்கை மித்திராவைப் பாண்டிய இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுத்தான்.
- தனது மகளை அப்பாண்டிய இளவரசனின் மகனுக்கு மணமுடித்துக்கொடுத்தான்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவனுக்கே சோழ இளவரசியையும் மணமுடித்துக்கொடுத்து சோழ நாட்டுப்பகையைத் தணித்துக்கொண்டான்.
- புத்தரின் திருப்பல்லைக்காக்கும் பணியைத் தமிழர் படையான வேளக்காரப்படையிடம் ஒப்படைத்தான்.
- தொன்மைச் சோழநாட்டில் பல பௌத்தவிகாரைகள் இருந்தன (பூம்புகார் உட்பட) 1ஆம் இராசராசசோழன் தமிழகத்தில் நாகபட்டினத்திலும் காஞ்சியிலும் பௌத்த விகாரைகளைக் கட்டினான்.
- இலங்கையிலும் வெல்கம் விகாரையைப் புதுப்பித்துக் கட்டினான்.
- வீரசோழன் அவையில் புத்தமித்திரரால் வீரசோழியம் எனும் தமிழ் இலக்கண நூல் அரங்கேற்றப்பட்டது.
- 3ஆம் குலோத்துங்கசோழன் காலத்தில் பௌத்த விகாரைகளுக்குப் பல நிலங்கள் வழங்கப்பட்டன.
- எனவே போர்க்காலங்களிற் சில விகாரைகள் சேதமுற்றிருக்கலாமே தவிர சோழர்களினாற் பௌத்த விகாரைகள் வேண்டுமென்றே அழிக்கப்பட்டிருக்க முடியாது.
- தமிழரே இலங்கையின் தொன்மைக்குடிகள்.

*தரம்* **09**

*பாடம்* **01**

## இலங்கையின் புவியற் பின்னணி

- தொலமியின் உலகவரைபடத்தில் இலங்கை, தமிழ்ப்பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இலங்கையின் தொன்மைக்குடியினர் தமிழர்களே (லெமூரியாவின் எஞ்சிய நிலப்பகுதியிலே தொடர்ந்து வாழ்ந்து வருபவர்கள்)
- தமிழகத்தில் கிளையினங்கள் தமிழினத்தைவிடக் கூடிய தொகையினராகிவிட்டனர்.
- இலங்கையில் மேற்குக்கரையோரத் தமிழர்கள் சிங்களவர்களாகிவிட்டனர்.

*பாடம்* **02**

## இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்கள்

- (எமது பகுதிகளிலுள்ள ஆறுகள் குளங்கள் கடனீரேரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனை, குடா, களப்பு கழிமுகம் போன்றவற்றைக் காண்பிக்கலாம்.

பாடம் 03

## இலங்கையின் காலநிலை

- தமிழ்ப்பகுதிகளில் குறைந்தளவே கிடைக்கும் மழைவீழ்ச்சி
- நீரைத் தேக்கிவைத்து நீண்டகாலம் பயன்படுத்தும் முறை

பாடம் 04

## இயற்கைத் தாவரங்கள்

- காடழிப்பு சேதங்களை மதிப்பிடல்.
- அபிவிருத்திக்கான அழிப்புக்களும் பழிவாங்கும் அழிப்புக்களும்
- மரங்களின் தமிழ்ப்பெயர்கள்.

பாடம் 05

## இலங்கையின் உணவுப் பயிர்கள்

- தமிழ்ப் பகுதிகளிலுள்ள குளங்களும் அவற்றை வெட்டியவர்களும்.
- உழவுப் பொருட்களுக்கான தடை

குறிப்பு;- உருவம் 5, 10 வன்னியிலே தலைகீழாக உள்ளது.

- எமது பகுதியில் விளையும் பயிர்களும், பயிர்ச் செய்கை முறைகளும், தடைகளும்;

பாடம் 06

## இலங்கையின் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை

- பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையினூடாகப் பெருமளவு அந்நியச்செலாவணிதிரட்டப்படுகின்றபோதிலும் மலையகத் தோட்டத்தொழிலாளர் (தமிழர்களாக இருப்பதால்) விலங்குகளைவிடக் கீழானவர்களாக நடத்தப்படுகின்றனர்.
- சிங்களப் படையினராலே தமிழ்ப்பகுதிகளிற் பெருமளவு தென்னை மரங்கள் தறித்து அழிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 07

## மீன்பிடித் தொழில்

- மீன்பிடித் தடைச்சட்டம்
- கடல்வலயச் சட்டம்
- மீன்பிடி உபகரணங்களுக்கான தடை
- சந்தைவாய்ப்பின்மை
- இராணுவக் கெடுபிடி (உணவு உடை)
- இராணுவத் தாக்குதல்
- தமிழர் பகுதியில் சிங்களவர் மீன்பிடிக்கு ஊக்குவிப்பு (புத்தளம், நீர்கொழும்பு, சிலாபம்)
- ஏனைய பகுதிகளிற் புதிய முறை அறிமுகம் எமது பகுதிகளுக்கு இல்லை.

பாடம் 08

## கால்நடை வளர்ப்பு

- கோழி வளர்ப்பு ஊக்குவிப்பின்மை, மருந்தின்மை, கோழித்தீன் இன்மை, மருத்துவரின்மை
- மாடு வளர்ப்பு.
- பாற்பொருள் சந்தைப்படுத்தலின்மை, பதப்படுத்தல் வசதியின்மை, மருத்துவரின்மை

பாடம் 09

## இலங்கையின் இயற்கை வளங்கள்

- காடழிப்பு வீதம்(1888இல் காடு 84%, 1998இல் காடு 16%)
- குடியேற்றங்கள் அபிவிருத்தித்திட்டங்களுக்கான காடழிப்பு
- இராணுவ நடவடிக்கை, பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கான காடழிப்பு.
- முருகைக்கல் அகழ்வினால் ஏற்படும் பாதிப்பு:
- 50 மி. மி. படைமண் உருவாக 1000 ஆண்டு எடுக்கும் (3 அடி மண் அழிப்பினால் ஏற்படும் இழப்பு)
- மண்ணரிப்பு கடலரிப்பைத் தடுக்கவேண்டியதன் இன்றியமையாமை

எமது வளங்கள் இல்மனைட் - புல்மோட்டை
கண்ணாடி மணல் - வல்லிபுரம்
சுண்ணக்கல் - வடபகுதி
களிமண் - முருங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 10

## இலங்கையின் சனத்தொகை

தமிழர் சனத்தொகை வீதம் குறைவுக்கான காரணங்கள்:
மலையகத் தமிழர் வெளியேற்றம்.
அடக்குமுறை இனவெறித் தாக்குதல்களால் வெளியேற்றம்
இனப்படுகொலை
விடுதலைப்போர்
மருந்து உணவுத்தடைகளினால் இறப்புவீதம் அதிகரிப்பு

பாடம் 11

## இலங்கையின் கைத்தொழில்கள்

- தொழிற்சாலைகள் அமைப்பதிற் புறக்கணிப்பு
- இராணுவத்தாக்குதல்களால் இருந்த தொழிற்சாலைகளும் அழிப்பு
- புதிய தொழிற்சாலைகள், ஆடைத் தொழிற்சாலைகள் சுதந்திரவர்த்தகவலய ஆலைகள்.

பாடம் 12

## பொலநறுவையின் பின் இராசதானிகள் இடம் பெயர்வு

- பொலநறுவையிலிருந்து ஆட்சிசெய்த மன்னர்கள் (கடைசி மூவரும் தமிழர்கள்)
- புத்ததந்ததாது பாண்டியன் படைகளினால் கைப்பற்றப்படல் (இன எழுச்சிக் கட்டுரை)
- யாழ்ப்பாண அரசின் எழுச்சி (7ஆம் ஆண்டு வன்னிச் சமூகக்கல்விமன்ற நூலில் உண்டு)
- 6ஆம் பராக்கிரமபாகுவின் ஆக்கிரமிப்பு பொற்காலம் என வர்ணிக்கப்படுகிறது.
- யாழ்ப்பாண ஆக்கிரமிப்பை நினைவுறுத்தும் ஜெயவர்த்தன புர எடுத்துக்காட்டு.
- 6 ஆம் பராக்கிரமபாகு செண்பகப்பெருமாள் என்ற தமிழ்ப் படைத்தலைவன் துணையோடு யாழ்ப்பாணத்தை ஆண்டது. 17 ஆண்டுகளே (1450-1467)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடம் 13*

## 1500 இற்குப்பின் இலங்கையில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும்

- போர்த்துக்கேயர் இலங்கையிற் காலூன்றிய வரலாறு (8 ஆம் ஆண்டு வன்னிச் சமூகக்கல்விமன்ற நூலில் உள்ளது)
- முதலாம் இராசசிங்கன் போர்த்துக்கேயருக்கெதிராக 30 ஆண்டுகள் வீரப்போர் நடத்தி வெற்றிகளைக் குவித்தான். இந்துமதத்தவன் என்பதால் அவன் பெருமைகள் இருட்டடிப்பு.

*பாடம் 14*

## இலங்கையும் பிரித்தானியர்களும்

- ஆங்கிலேயர் எழுச்சிக்குக் காரணங்கள் கண்டிமன்னனுக்கெதிரான காட்டிக்கொடுப்பு
- ஆங்கிலேயருக்கெதிரான முதற் கிளர்ச்சிக்குக் காரணம் கண்டியில் முஸ்லீம்களுக்கு முகாந்திரம் பதவி வழங்கியதால் ஏற்பட்ட சினம்.
- தேசிய காங்கிரசின் தலைவர் சேர். பொன் அருணாசலம் (பாட நூலில் இராமநாதன் எனக் கூறப்பட்டுள்ளது)
- 1833 இல் 3 அரசுகள் ஒன்றிணைப்பு கோல்புறுத் அரசியற் றிட்டம்.
- 180 ஆம் பக்கக் குழப்பம்
- டொனமோர் அரசியற் சீர்திருத்தம் 1931
- சோல்பரி அரசியற் சீர்திருத்தம் 1948

*பாடம் 15*

## இலங்கையின் ஆட்சிமுறை

- இலங்கையின் முதலாவது குடியரசு ஆட்சியமைப்பு. (நடைமுறைக்குவந்த அரசியல் யாப்பும் விளைவுகளும்)
- இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு (நடைமுறைக்குவந்த அரசியல் யாப்பும் விளைவுகளும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 10
பாடம் 01

# இலங்கையின் பண்டைய தொழில் நுட்பம்

- தமிழரின் தொழினுட்பங்கள் பலவற்றை அறியமுடியாத நிலை. புகழ்பெற்ற பண்டைய கோயில்கள் சிதைக்கப்பட்டு இருந்த இடமும் காணப்படவில்லை.
  மாதோட்டத் துறைமுகம் மண்மேடாகிவிட்டது.
  குளங்கள் பல தூர்ந்துவிட்டன, சில வடிவங்கள் மாறி விட்டன.

- அகழ்வாய்வுகள் செய்யப்பட்டமை.
- தேரவாத பௌத்த பாளி இலக்கியங்களின் இருட்டடிப்பு.
- அறியக்கூடியதாக இருப்பவை (கேள்விப்பட்டவை)
- குவேனி நூல் நூற்றது
- புத்தர் வருகையின்போது நாக அரசு இரத்தின அரசிருக்கை (சிம்மாசனம்)

- ஆரியக்குடியேற்றங்கள் என்ற மகாவம்சக் கூற்றுக்களுக்குத் தொல்லியற்சான்றுகள் அகப்படவில்லை, மாறான சான்றுகளே இதுவரை கிடைத்துள்ளன.

- விசயனின் திருமணத்துக்குக் கொண்டுவந்ததாக மகாவம்சம் குறிப்பிடும் பாண்டிய இளவரசியும் 1000 குடும்பத்தினரும் பற்றிய செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன.

- பத்தகச்சனாவின் உடன்பிறப்புக்களின் குடியேற்றம்பற்றிய செய்திகள் மிகைப்படுத்தப்பட்ட கற்பனையாகவே கொள்ளப்படவேண்டும்.

- இரும்பை ஆரியரே அறிமுகப்படுத்தினர் என்பது தவறாகும். (4000 ஆண்டுகளுக்கு முன்னைய இரும்பின்பயன்பாடு அரிக்கமேடு ஆதித்த நல்லூர்ப்பகுதிஆய்வுகளிலிருந்து உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.)

- (8 ஆம் பக்கத்தில் உள்ள மன்னர்களின் காலங்களிற் சில தவறானவை) தங்க செதுக்கல் தந்தசெதுக்கல் என வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 02

## இலங்கையின் புராதன வெளிநாட்டுத்தொடர்புகள்

பக் 3 பக் 8 இல் ஜம்புகோணப்பட்டினம் தவறான இடங்களிற் குறிப்பிடப்பட்டுள்ளன.

✣ சேனன்குத்திகன் எல்லாளன் இந்தியாவிலிருந்து வந்ததாகக் கொள்ளமுடியாது.

✣ எல்லாளனுக்குத் தூபி அமைக்கப்பட்டதாக மகாவம்சம் கூறியபோதும் தற்போது அது மறைக்கப்பட்டுள்ளது.

✣ தமிழகத்துக்கு மிக அருகில் இருக்கும் மாந்தைதான் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்ட இலங்கையின் மிகப் பழைய துறைமுகமாகும்,

✣ தமிழக மன்னர்களின் உதவியுடனேயே பல சிங்கள மன்னர்கள் தமது ஆட்சியை மீட்கவோ காப்பாற்றவோ முடிந்தது.

✣ முஸ்லீம்களின் வருகை 13ஆம், 9ஆம் நூற்றாண்டு என முரண்பட்ட தகவல்கள் நூலிலே தரப்பட்டுள்ளன.

✣ ஆரியர் இங்கு வந்து பண்டமாற்று வர்த்தகத்திலே ஈடுபட்டதாகக் கூறப்படும் கூற்றிலிருந்து இங்கிருந்த மக்கள் செழிப்புடன் வாழ்ந்தது உறுதியாகிறது.

✣ திரிபாஷா கல்வெட்டுப்பற்றி விளங்கப்படுத்தப்படல் வேண்டும்!

✣ இபன்பற்றுற்றா இலங்கை வணிகம் தொடர்பாகக் கூறிய கூற்றுகள்.

பாடம் 03

## கண்டி இராசதானி

✣ ஐரோப்பியர் வருகையின்போது இருந்த 3 அரசுகளில் யாழ்ப்பாண அரசே காலத்தால் முந்தியதும் வலுவுள்ளதுமான அரசாகத் திகழ்ந்தது.
(7 ஆம் ஆண்டு சமூகக்கல்விமன்ற நூலிலே கூடுதல் விளக்கம் உண்டு)

✣ 1 ஆம் விமலதர்மசூரியன் தந்ததாதுவை மீட்டதாகக் குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடப்படுவது தவறாகும். (இன எழுச்சிக் கட்டுரையில் விளக்கம் உண்டு)

✠ 1ஆம் விமலதர்மசூரியன் ஆட்சியைக் கைப்பற்றவே மீண்டும் மதம்மாறினான்.

✠ 2ஆம் இராசசிங்கனின் மனைவி நாயக்கர் குலத்தைச் சேர்ந்த தமிழ்ப்பெண்

✠ (கண்டியின் கடைசி நான்கு தமிழ் மன்னர்களினதும் ஆட்சிக் காலம் பற்றிய விபரம் ஆசிரியர் கைந்நூலில் உள்ளது)

✠ 76 ஆம் பக்கம் செயற்பாட்டுப் பகுதியிற் குறிப்பிட்டுள்ள மன்னர்களின் காலங்களிற் சில தவறானவையாகும்.

✠ 1739 இல் நாயக்க மன்னர்கள் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றினர் என்ற கூற்றுத் தவறானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org